

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம்.　　www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2300 மடங்கல் நல்லோரை ஆவணித் திங்கள் 10 ஆம் நாள் (27-08-2026 வியாழக்கிழமை) நிறைமதி வெளியீடு +94 21 222 9722



அருள்மிகு மங்களாம்பிகை உடனுறை அருட்துறைநாதர் திருக்கோயில் - திருவெண்ணெய்நல்லூர்

# ஈழத்துச் சைவமரபில் துறவுப் பயிற்சி



**பண்டு நால்வருக்கு அறம் உரைத்து அருளிப் பல் உலகினில் உயிர் வாழ்க்கை**
**கண்ட நாதனார், கடலிடம் கைதொழ, காதலித்து உறை கோயில்**
**வண்டு பண் செயும் மா மலர்ப்பொழில் மஞ்ஞை நடம் இடு மாதோட்டம்,**
**தொண்டர் நாள்தொறும் துதிசெய, அருள் செய் கேதீச்சரம் அதுதானே.**

இலங்கையில் சைவ சமயத்தின் வழி நின்று, சைவத்தின் வளர்ச்சி, மேன்மை, மரபைப் பேணுதல் மற்றும் மரபுத்தொடர்ச்சியை உறுதிசெய்தல் குறிப்பாக திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்களைக் கற்றல் மற்றும் கற்பித்தல், மக்கள் சேவை போன்ற சிவபுண்ணியங்களை திருவருள் துணையுடன் செய்ய நினைக்கும் சிவனடியார்கள், நன்னிசையுடன் துறவுக்கான பாதையில் பயணிக்கவிரும்பினால் படிமுறைகளாக எங்கள் மடத்தினால் பயிற்சிகள் வழங்க திருவருள் கைகூடியிருக்கிறது.

நீங்கள் இல்லறத்தில் இருந்தாலும் சரி, திருமணமாகாதவர்களாக இருந்தாலும் சரி இந்த துறவுப் படிநிலைப் பயிற்சில் கலந்துகொள்ளலாம். முழுநேரமாக வருபவர்களுக்கு தங்குமிடம், உணவு மற்றும் அடிப்படை வாழ்வுக்கான வசதிகள் ஒழுங்குசெய்து தரப்படும்.

**(அ) முதல்நிலை (ஓராண்டு)** — திருமுறை மற்றும் சித்தாந்த சாத்திரங்கள் கற்றல். அத்துடன் உங்கள் பக்குவநிலைக்கு ஏற்ப தீக்கை மற்றும் சிவபூசைப் பயிற்சி.

**(ஆ) இடைநிலை (ஆறு திங்கள்)** — தமிழக சைவ ஆதீனத்தில் காவியுடை பெறுதல், துறவிற்கான தீக்கை மற்றும் தமிழகத்தில் ஒரு சைவ மடத்தில் துறவுப் பயிற்சி. இதன் முடிவில் இரண்டாம் துறவு தீக்கை எடுத்து குண்டலம், கண்டிகை தரித்து நாடு திரும்பலாம். இந்தக் காலப்பகுதியில் தமிழ்நாடு திருத்தல யாத்திரையும் உள்ளடங்கும்.

**(இ) கடைநிலை (ஓராண்டு)** — தென்னாடு சிவமடத்தில் அல்லது இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு சைவமடத்தில் ஓராண்டு காலத் துறவுச் சேவை. இதன்வழி வந்தவர்கள் தகுந்த மேல்நிலைத் தீக்கையின் மூலம் தேவையுள்ள மடங்களுக்கு திருவருட்துணையுடன் ஆதீனமாக அல்லது குருமுதல்வராக குருப்பட்டம் பெறலாம்.

எமது சமயமாகிய சைவசமயத்திற்கு தம்மைத் தந்து, மேன்மைகொள் சைவநீதி உலகமெலாம் விளங்கச் செய்ய இந்தப் பிறவியில் உங்களுக்கு கிடைத்திருக்கும் ஒரு திருவருள் கருணை இது. இது எல்லா உயிர்களுக்கும் வாய்க்கப்பெறா, மாறாக உய்வடையத் துடிக்கும் உயிர்களுக்கு வழிபாடு மற்றும் மக்கள் சேவையூடான ஒரு முத்திப் பாதை இது.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**

**தென்னாடு சிவமடம்,**
**தென்னாடு வீதி, கொக்குவில் கிழக்கு.**
**கொக்குவில்.**

**தொடர்புகளுக்கு:**
**0707701111, 021 222 9722,**
**thennavan@thennadu.org**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம்.    www.thennadu.org



**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்** - தலைமை ஆசிரியர்,
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org




# ஆதீனம் எனும் அரும்பெரும் மரபினைப் போற்றுவோம்

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

**நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்
என்றிவர் என்னோடு எண்மரு ஆமே - திருமந்திரம் 67**

தமிழ் உலகில் சைவ ஆதீனங்கள் பல இருக்கின்றன. அதைவிட வீரசைவ ஆதீனங்களும் இருக்கின்றன. இதில் கயிலாய பரம்பரை ஆதீனங்கள் மற்றும் அதைவிடவும் பழமையான ஆதீனங்களும் அடங்கும். சைவத்தினையும், தமிழ்மொழியையும் பாதுகாத்து அடுத்தடுத்த தலைமுறைக்கு மொழி, சைவம், சித்தாந்தம், மரபுகள் என்று தமிழர் பண்பாட்டுக் கூறுகளை ஊடுகடத்தி இன்று எல்லோருக்கும் அவை கிடைக்கக்கூடியதாக இருக்கின்றமைக்கு ஆதீனங்களே அடிப்படைக்காரணம்.

ஒரு வரலாற்றுக் கட்டிடத்தினை எவ்வாறு பேணிப் பாதுகாக்கின்றோமோ, ஒரு தொல்லியல் துறை எவ்வாறு தொல்பொருட் சின்னங்களை பேணிப் பாதுகாக்கின்றார்களோ அதுபோல், ஏன் அதைவிடவும் மேலாக பேணிப் பாதுகாக்க வேண்டிய மரபு இந்த ஆதீன சந்தான மரபு. தமிழர்களாகிய நாங்கள் அவர்களுக்கான மரியாதையை கொடுத்து, அவர்களை மதித்துப் போற்றி வணங்கவேண்டும்.

சந்தான மரபில் வந்த ஆதீன இருக்கையை அலங்கரிக்கும் இன்றைய ஆதீனங்கள், உயர்ந்த சிந்தையில் திருவருள் துணையுடன் ஆதீனங்களைத் தோற்றுவித்த குருமுதல்வர்களின் வடிவமே என்பதை நாங்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். அந்தவகையில் ஆதீனங்களுக்கு, துறவிகளுக்கு நாங்கள் கொடுக்கவேண்டிய மரியாதையை நாம் கொடுக்க வேண்டும். தற்போதைய காலகட்டத்தில் ஆதீன சொத்துக்களை, அதனுடன் தொடர்புள்ள மக்கள் மற்றும் நிர்வாகத்தினை நடாத்துவது ஆதீன சந்நிதானங்களே. இப்படியான பெரிய ஒரு நிறுவனத்தினை, இன்றைய சூழலில் நடத்தும்போது அவர்களும் உலகியல் பார்வையில் சில இடங்களில் படத்தான் செய்கிறார்கள். அவற்றினை ஒருபுறம் விடுத்து, அவர்களின் அர்ப்பணிப்பு, வாழ்வியலில் துறவுகொண்டு வாழும் வாழ்க்கை, அதிகாலை முதல் துயில் கொள்ளும்வரை தொடர்ச்சியான வழிபாடுகள், பூசைகள், மந்திர உச்சரிப்பு, விரதங்கள், விழாக்கள் என்று ஓய்வில்லாத ஒரு துறவு வாழ்க்கை என்று அவர்களின் ஒருநாள் சுழற்சியை, அருகில் இருந்தால் தான் புரியும்.

இந்த ஆதீனமரபு இன்னும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு சந்தான மரபாக சென்று எங்கள் மொழியின், சைவத்தின், சித்தாந்தத்தின் பெருமையை எங்களுக்கு பின் வரும், ஏன் பல சந்ததிக்கு பின்னர் வருபவர்களும் அறியக்கூடிய மற்றும் அனுபவிக்கக்கூடிய காலத்தினை உருவாக்கும், ஒரு முன்னோக்கிய ஒரு கடிகாரக் கப்பலின் இன்றைய இறங்குதுறை ஆகும். ஆகவே அந்தக் கப்பலை சீர்செய்து சிறப்பிக்காவிட்டாலும், சொல்கொண்டு பாதிக்காமல் விட்டால் சிறப்பு. சரி பிழைகளை நேரடியாக அவர்களிடம் எடுத்துரைக்கலாம் இல்லை எழுத்துமூலம் கொடுக்கலாம். அதன்வழி அவர்கள் மாறுகிறார்களா இல்லையா என்பது திருவருள் சித்தம்.

இதுபோல் இலங்கையிலும் ஒரு ஆதீன மரபு மற்றும் சைவத் தலைமை மிளிரவேண்டும். இந்தச் சந்தான மரபு போன்ற தொடர்ச்சியான சமய மரபு மேலோங்கவேண்டும். அத்துடன் கோயில்களும் ஆதீனங்கள் போல் மக்கள் பணி, திருமுறை,சித்தாந்த வகுப்புகள் மற்றும் பதிப்புகள் என்று எமது சமய பண்பாட்டினை அடுத்த தலைமுறைக்கு ஊடுகடத்த முன்வரவேண்டும்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org




# தென்னாடு நிறைமதி அறிக்கை

(29-07-2026) - **"முதற்சங்க வீதியாக"** சீரமைக்கப்பட்டு அமையப்பெற உள்ள புதிய வீதிக்கான தொடக்க பூசை வழிபாடுகள் செந்தமிழில் இடம்பெற்றன. (29-07-2026) – தென்னாட்டின் எழுபத்திரண்டாவது திங்கள் இதழ் வெளியீடு, கடந்த மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2300, கடகம் நல்லோரை, ஆடித் திங்கள் 13 ஆம் நாள் (29-07-2026 – புதன்கிழமை) ஆடி நிறைமதி நன்னாளில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில், தென்னாடு துணை முதல்வர் சிவத்திரு. குணரத்தினம் பிரதீபன், தென்னாடு சிவமடத்தின் பிரதம அருச்சுனைஞர் சிவ பிரதாபனார், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை வைத்தியக் கலாநிதி சுப்பிரமணியம் சிவபாத மூர்த்தி, கொக்குவில் அஞ்சல் அதிபர் திருமதி. ஜெயந்தினி உமாச்சந்திரன், இலிங்கன் பல்கலைக்கழக மாணவன் சிவத்திரு. கேதாரநாதன் சரவணன் மற்றும் சைவ மாணவர் சபையினருடன் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில், தென்னாடு துணை முதல்வர் சிவத்திரு. குணரத் தினம் பிரதீபன் அவர்கள், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை வைத்தியக் கலாநிதி சுப்பிரமணியம் சிவபாதமூர்த்தி அவர்களுக்கு முதல் இதழை வழங்கி, தென்னாட்டின் எழுபத்திரண்டாவது திங்கள் இதழை வெளியிட்டு வைத்தார்

தொடர்ந்து, கொக்குவில் அஞ்சல் அதிபராக புதிய நியமனம் பெற்று அளப்பரிய சேவைகளை, சைவத்தமிழ் பற்றுடன் ஆற்றி வருகின்ற திருமதி. ஜெயந்தினி உமாச்சந்திரன் அவர்களையும், தமிழ் வரலாற்று ஆராய்ச்சிகளை பெற்றுக்கொண்டு ஆக்கபூர்வ மான கட்டுரைகளை வெளியிட்டு வரும் இலிங்கன் பல்கலைக்கழக மாணவன் சிவத்திரு. கேதாரநாதன் சரவணன் அவர்களையும் சிறப்புச் செய்து கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது. தொடர்ந்து அடியார்களுக்கு அமுது செய்வித்தலுடன் நிகழ்வு நிறைவடைந்தது.

(10-08-2026) – ஆடித் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடு கள் சிறப்பாக இடம்பெற்றன. (12-08-2026) – ஆடி மறைமதி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (15-08-2026) – பிரணவம் அறக்கட்டளை நடாத்தும் முதலாவது பன்னாட்டு சைவ மாநாட்டில் எழுந்தருளி சிறப்பித்திட யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த தமிழக சைவ ஆதீன குருமகாசந்நிதானங்களான திருக்கயிலாய பரம்பரை பேரூர் ஆதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், திருக்கயிலாய கந்தப்பரம்பரை திருஞானசம்பந்தர் ஆதீனம் குருமகாசந்நிதானம் அருட்குருநாதர் சீர்வளர்சீர் சிவாக்கர தேசிக சுவாமிகள் ஆகியோர் தென்னாடு சிவமடத்தில் தங்கியிருந்து, ஐம்பூதநாதர் சன்னிதியில் சிவபூசை ஆற்றி வழிபட்டனர்.

(22-08-2026) – இலங்கை சைவநெறிக் கழகத்தின் தென் னிந்திய திருத்தல யாத்திரைக்காக வருகை தந்திருந்த 12 பேர் கொண்ட அடியார் திருக்கூட்டத்திற்கு அமுது செய்வித்தல் சிறப்பாக இடம்பெற்றது. (25-08-2026) – வவுனியா வேப்பங்குளம் இந்து அன்பகம் சிறுவர் அபிவிருத்தி நிலைய முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என 40 பேர் தென்னாட்டிற்கு வருகை தந்து, ஐம்பூதநாதருக்கு நீர் ஊற்றி வழிபட்டனர். தொடர்ந்து அடியார்களுக்கு அமுது செய்வித்தலும் இடம்பெற்றிருந்தது. (25-08-2026) – ஆவணித் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (26,27-08-2026) – சிவத்திரு. சோமசூரியசிங்கம் காண்டீபன் (தென்னரசு) அவர்களிற்கான ஆசிரியத் திருமுழுக்கு தீக்கை வழங்கல் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. இவ்வழிபாடுகளை சிவத்திரு. உருத்திரபுரீசுவரர் குருக்கள் அவர்கள் ஆற்றி வைத்தார்.

(26,27-08-2026) – நல்லை ஆதீன தெய்வீகத் திருக்கூட் டத்தின், நல்லூர் பெருந்திருவிழாக்கால அறநெறி மாணவர் களுக்கான கலைநிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக வருகை தந்திருந்த, ஹட்டன் பன்மூன்றில் அமைந்துள்ள அன்பே சிவம் அறநெறிப் பாடசாலை மாணவர் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள் என 80 பேர் இரு தினங்கள் தென்னாட்டில் தங்கியிருந்தார்கள். அவர்களுக்கான திருவமுது செய்வித்தலும் இடம்பெற்றிருந்தது.

**திருச்சிற்றம்பலம்**

# முன்னேசுவரத்தில் பிரதமர் அவர்கள் சிறப்பு வழிபாடு



இலங்கைப் பிரதமர் கலாநிதி ஹறினி அமரசூரிய அவர்கள் சிலாபம் பகுதியில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க அருள்மிகு முன்னேசுவரம் திருக்கோயிலுக்கு, கடந்த 23-08-2026 ஞாயிற்றுக்கிழமை அன்று சென்று விசேட வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார். திருக்கோயிலின் வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டுச் சிவபெருமானுக்கு நடத்தப்பட்ட சிறப்புப் பூசைகளில் கலந்துகொண்ட பிரதமர், நாட்டின் அமைதி, செழிப்பு, ஒற்றுமை மற்றும் மக்கள் அனைவரின் நலனுக்காகவும் வழிபாடு செய்தார். தொடர்ந்து திருக்கோயிலின் பிரதான பூசகரிடமிருந்து அருள் ஆசிகளையும் அவர் பெற்றுக்கொண்டார்.

ஆண்டுதோறும் ஆவணித் திங்களில் நான்கு வாரங்களுக்கும் மேலாக நடைபெறும் இந்த வரலாற்றுப் பிரசித்தி பெற்ற முன்னேசுவரம் திருவிழாவானது, இலங்கை முழுவதிலுமிருந்து சைவ, பௌத்த, கிறித்தவ மற்றும் இசுலாமிய பத்தர்களைப் பெருமளவில் ஈர்க்கும் ஒரு சமய நல்லிணக்கப் பெருவிழாவாக விளங்குகின்றது. இத்தகைய அற்புதத் தலத்திற்கு வருகை தந்த பிரதமரை முன்னேசுவர நிர்வாகத்தினர் கௌரவத்துடன் வரவேற்றனர். சிவபெருமானின் அருள் இலங்கையின் அனைத்து மக்களுக்கும் அமைதியையும், பலத்தையும், நல்வாழ்வையும் வழங்கி நாட்டைப் பாதுகாப்பதாக அமைய வேண்டும் என்ற வழிபாட்டுடன் இந்நிகழ்வு சிறப்புடன் நிறைவுற்றது.

**திருச்சிற்றம்பலம்**

# விழிப்புணர்வு ஏற்படுத்த வகைசெய்தல் கோரி இந்துக்கலாச்சாரத் திணைக்களப் பணிப்பாளர், மாவட்டச் செயலரிடம் வலியுறுத்தல்

சைவக் கோயில்களின் திருவிழாக் காலங்களில் இடம்பெறும் பண்பாட்டுச் சீர்கேட்டு நிகழ்வுகளையும் களியாட்டங்களையும் தடைசெய்து, மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சிவத்திரு. யதுகுலசிங் அநிருத்தன் அவர்கள், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரைக் கேட்டுக்கொண்டுள்ளார். இது தொடர்பில் அவர் அனுப்பியுள்ள கடிதத்தில், இலங்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ள 7000 இற்கும் மேற்பட்ட சைவக் கோயில்கள் சைவத் தமிழர்களின் பண்பாட்டு மேன்மையையும் பத்தி நெறியையும் பேணும் புனித நிலைக்களங்களாகத் திகழ்வதைச் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும், அண்மைக் காலத்தில் கோயில் திருவிழாக்களை முன்னிட்டு சைவச் சாத்திரங்களுக்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் புறம்பான களியாட்டங்கள், பத்தி நெறிசாராத இசை நிகழ்ச்சிகள் மற்றும் இளம் சிறார்களின் மனங்களைப் பாதிக்கும் ஒழுக்கக்கேடான செயற்பாடுகள் இடம்பெறுவது ஆன்மீக ஆர்வலர்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய பண்பாட்டுச் சீர்கேடுகளைத் தவிர்க்கும் பொருட்டு, கோயில் நிர்வாகத்தினருக்கு உரிய விழிப்புணர்வை வழங்குதல், அறநெறிக் கல்விக்கும் பாரம்பரியக் கலைகளுக்கும் முன்னுரிமை அளித்தல், கோயில் சூழலில் அறநெறிப் பாடசாலை மாணவர்களினதும் உள்ளூர் கலைமன்றங்களினதும் கலை



வெளிப்பாடுகளுக்குக் களம் அமைத்துக்கொடுத்தல் போன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தியுள்ளார். மேலும் வீணான ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து அப்பணத்தைச் சமூக ஆக்கபூர்வச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துமாறும், திருவிழாக் காலங்களில் காவல்துறைக் கண்காணிப்பை வலுப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். எதிர்காலத்தில் கோயில் விழாக்கள் நெறிமுறையுடனும் சமூகத்திற்குப் பயன்படும் வகையிலும் அமைவதை உறுதி செய்ய அவசர நடவடிக்கை எடுக்குமாறு மாவட்டச் செயலருக்குப் பணிப்பாளர் கடந்த 31-07-2026 நாளிட்ட கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

**திருச்சிற்றம்பலம்**

# தருமபுரம் ஆதீன ஆவணி மூலத் திருநாள் விருது வழங்கல்

மயிலாடுதுறை திருக்கயிலாயப் பரம்பரை தருமபுரம் ஆதீனத்தில் ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வரும் ஆவணி மூலத் திருநாள் விழா, நிகழாண்டும் ஆவணித் திங்கள் 6ஆம் நாள் (23-08-2026) வரை மூன்று நாள்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. நிறைவு நாளன்று சொக்கநாதப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடுகளும் மகேசுவர பூசையும் இடம்பெற்றன. தொடர்ந்து, திருமுறை செப்பேடு கண்ட அருளாளரும் தருமபுரம் ஆதீனத்தின் 27 ஆம் குருமகா சந்நிதானமுமான **சீர்வளசீர் கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** சொக்கநாதப் பெருமானுக்குச் சிறப்புப் பூசைகள் செய்து, 26 ஆம் குருமகா சந்நிதானத்தின் நூற்றாண்டினை முன்னிட்டுச் சான்றோர்களுக்கு விருதுகளையும் பட்டங்களையும் வழங்கி அருளாசி நல்கினார். இதன்போது, சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் மாண்பமை எம். சொக்கலிங்கம் அவர்களுக்குத் 'தருமநிறை நீதிச்செம்மல்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

மேலும், 1943 ஆம் ஆண்டு 24 ஆம் குருமணிகள் ஆட்சிக்காலத்தில் ஆவணி மூல நாளில் 'புலவர் தினம்' கொண்டாடிய மரபைப் பின்பற்றி, தருமைச் சான்றோர்களின் அரும்பணிகளைப் போற்றும் வகையில் முதன்முறையாக அவர்கள் பெயர்களில் விருதுகள் அறிவிக்கப்பட்டு, 32 சான்றோர்களுக்குத் 'தருமைச் சான்றோர் விருது' வழங்கப்பட்டது. இவர்களுக்கு 10 கிராம் வெள்ளிப் பதக்கம், பத்தாயிரம் ரூபாய் பொற்கிழி, சான்றிதழ் மற்றும் சாதரா



அணிவித்து அருளாசி வழங்கப்பட்டது. சிவசீர். பா.இராஜசேகர சிவாசாரியார் (மருதூர் சீர்வளர்சீர் ஆயுதத்தாரணத் தம்பிரான் சுவாமிகள் விருது), முனைவர் அருணை.பாலறாவாயன் (சீர்வளர்சீர் வெள்ளியம்பலவாண முனிவர் விருது), அ.வேதரத்னம் (சீர் தாயுமான சுவாமிகள் விருது) உள்ளிட்ட 32 அறிஞர்கள் இவ்விருதுகளைப் பெற்றனர்.

இவற்றுடன், ஆகமப் பாடசாலையில் 5 ஆண்டுகள் பயின்ற 17 பேருக்கு 'ஆகம பிரவீணர்' பட்டமும், தருமை ஆதீன அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் கீழ் இயங்கும் மையங்களில் பயின்ற 122 பேருக்கு 'சைவ சித்தாந்த புலவர்' சான்றிதழும், 87 பேருக்கு 'சைவ சித்தாந்த கலாநிதி' சான்றிதழும் வழங்கப்பட்டன. இதில் தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரியில் எம்.ஏ. தமிழ் பயிலும் இஸ்லாமிய மாணவி ரசீதா பேகம் 'சைவ சித்தாந்த புலவர்' சான்றிதழ் பெற்றது குறிப்பிடத்தக்க சிறப்பாக அமைந்தது.

**திருச்சிற்றம்பலம்**

# கவுந்தப்பாடியில் எழுந்தருளி அருளாசிகளை வழங்கிய குருமகாசந்நிதானங்கள்



செங்கோல் ஆதீனத்தில் தீக்கை பெற்ற அன்பரான பவானி லட்சுமி நகர் சிவத்திரு. வெங்கடேசுவரன் அவர்களின் மகள் செல்வி சுருதி என்பவருக்கும், புதுச்சேரி சிவத்திரு. திருவெங்கடபதி அவர்களின் மகன் செல்வன் அரவிந்தன் என்பவருக்கும் கவுந்தப்பாடி அருள்மிகு அண்டம் முழுதுடையார் திருக்கோயிலில், கடந்த 23-08-2026 அன்று காலை திருமண விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் செங்கோல் ஆதீன குருமகாசந்நிதானம் மற்றும் துலாவூர் ஆதீனம் குருமகாசந்நிதானம் ஆகியோருடன் தமிழ்ச் சைவ ஞானத் திருமடத்தின் சீர்வளர்சீர் ஞானஒளி அடிகள் அவர்களும் இணைந்து முன்னிலை வகித்து மணமக்களை வாழ்த்தி அருளாசி வழங்கினர்.

திருமண நிகழ்வினைத் தொடர்ந்து, கவுந்தப்பாடிக்கு எழுந்தருளிய செங்கோல் ஆதீனமும் துலாவூர் ஆதீனமும் தமிழ்ச் சைவ ஞானத் திருமடத்திற்கு வருகை தந்தனர். திருமடத்திற்கு வருகை தந்த குருமகாசந்நிதானங்களை அன்பர்கள் புடைசூழத் திரண்டு சென்று பெருமதிப்போடு வரவேற்றனர். அதனைத் தொடர்ந்து அடியார்கள் குருமகாசந்நிதானங்களின் திருவடி பூசை செய்து, குருவருளையும் திருவருளையும் பெற்று மனநிறைவும் பெருமகிழ்ச்சியும் எய்தினர்.

**திருச்சிற்றம்பலம்**

# நல்லூர் வடக்கு வாசல் அலங்கார வளைவின் காண்பிய விரிப்பு நிகழ்வு






நல்லூர் கந்தசுவாமி கோயில் வடக்கு வாசலில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அலங்கார வளைவின் (தோரண வாயில்) காண்பிய விரிப்பு நிகழ்வு, நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கூடலின் ஏற்பாட்டில் கடந்த 06-08-2026 ஆடி கார்த்திகை நாளன்று மிகச் சிறப்பாக இடம்பெற்றது. சிவத்திரு. ESP. நாகரத்தினம் அவர்களின் முருகனுக்கான நீண்ட நாள் மேலான விருப்பம் இதன் மூலம் நிறைவேறியுள்ளது. பண்டைக் காலத்தில் சாஞ்சி அசோகன் காலம், பல்லவர் காலம் மற்றும் யாழ்ப்பாண அரசர் சங்கிலியன் காலம் தொட்டே தோரண வாயில்கள் அமைக்கும் மரபு இருந்துள்ள நிலையில், நல்லூ ரானுக்குரிய தோரண வாயில்கள் 2021 தைப்பொங்கலில் செம்மணியிலும், 2024 பங்குனி உத்தரத்தில் கைலாச பிள்ளையார் கோயிலடியிலும், தற்போது வடக்கு திசையிலும் அமைக்கப்பட்டிருப்பது வரலாற்றுச் சிறப்புமிக்கது.




இந்த வடக்கு வாசல் தோரண வாயில் தாமரைத் தளம், கொடி, முத்துமாலை, மகரம், சிம்மம் போன்ற பஞ்சாங்க வேலைப்பாடுகள் கொண்ட நான்கு தூண்களுடன், கொடுங்கை அமைப்பில் இரண்டு தளங்களைக் கொண்ட கோபுரமும் ஐந்து கலசங்களும் தாங்கி கம்பீரமாகக் காட்சி தருகின்றது. கோபுரத்தின் வடக்கே ஆறுமுக சுவாமியும், தெற்கே முத்துக்குமார சுவாமியும் தேவியருடன் நாயகமாகக் காட்சி தர, வலப்புறம் பிள்ளையாரும் இடப்புறம் பைரவரும் எழுந்தருளியுள்ளனர். மேலும் வடக்கே இரண்டு வேழத்திருக்களும் (கஜலட்சுமி), குபேரனின் பிரதான செல்வங்களான கல்வியைக் குறிக்கும் தாமரை ஏந்திய பதுமநிதியும், செல்வத்தைக் குறிக்கும் வலம்புரிச் சங்கு ஏந்திய சங்கநிதியும் அமையப்பெற்றுள்ளன.

தூண்களில் வேல் ஏந்திய பத்தர்களும் காவடியாடும் பத்தர்களும் செதுக்கப்பட்டுள்ளதுடன், "அலங்காரா நல்லூரா" என்ற தனித்துவ வாசகமும் பொறிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் அடியார்கள் அனைவரும் சாத்வீக குணத்தின் அடையாளமான வெள்ளை சால்வையுடன் கலந்துகொண்டது பெருமிதம் அளிப்பதாக அமைந்ததுடன், கிழக்கு மற்றும் மேற்கு புறங்களிலும் விரைவில் இத்தகைய அலங்கார வளைவுகள் எழ வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் விழா இனிதே நிறைவுற்றது.

**திருச்சிற்றம்பலம்**

# யாழ்ப்பாணத்தில் பன்னாட்டு சைவ மாநாடு வரலாற்றுச் சிறப்போடு நிறைவு



ஹட்டன் பிரணவம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில், **"வாழ்வியலில் திருமுறைகள் - திருமுறைகளில் வாழ்வியல்"** எனும் தொனிப்பொருளில் முதலாவது பன்னாட்டு சைவ மாநாடு யாழ்ப்பாணம் நல்லூர் சட்டநாதர் வீதியிலுள்ள இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் கடந்த 15.08.2026 சனிக்கிழமை அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாநாட்டின் தொடக்கமாக நல்லூர் அருள்மிகு சட்டநாதர் சிவன் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றதுடன், ஹட்டன் மந்தாகினி திருஞானசம்பந்தர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் திருத்தொண்டர் புராண இசையோடு ஆன்மீக ஊர்வலம் மாநாட்டு மண்டபம் நோக்கிச் சென்றது. மண்டப வாயிலில் விடைக் கொடியேற்றம், திருமுறை ஓதல் மற்றும் அருளாளர்களுக்கான பாதபூசை ஆகியவற்றுடன் நிகழ்வுகள் சிறப்பாகத் தொடங்கின.

மாநாட்டின் வரவேற்புரையை அமைப்பாளர் நடராசா சக்திதானந்தம் நிகழ்த்த, சிவசீர். ச.பத்மநாபக் குருக்கள், சிவசீர். தியாக மயூகிரிக் குருக்கள் ஆகியோர் ஆசியுரைகளையும், யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன் வாழ்த்துரையையும், வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி வ.மகேஸ்வரன் தலைமையுரையையும் வழங்கினர். இம்மாநாட்டில் தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்து எழுந்தருளிய குருமகாசந்நிதானங்களான திருக்கயிலாய பரம்பரை பேரூர் ஆதீனம் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், திருக்கயிலாய கந்தப்பரம்பரை திருஞானசம்பந்தர் ஆதீன குருமகாசந்நிதானம் அருட்குருநாதர் சீர்வளர்சீர் சிவாக்கர தேசிக சுவாமிகள் மற்றும் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு. வேலன் சுவாமிகள் ஆகியோர் கலந்துகொண்டு ஆன்மீக அருளுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

நிகழ்வின் உரையாடல்களில், சைவ சமயம் பதி–பசு–பாசம் எனும் முப்பொருள் உண்மையை அடிப்படையாகக் கொண்டது என்பதும், சீர்வளர்சீர் ஆறுமுகநாவலர் பெருமான் வழியில் நின்று ஆலயங்களிலும் சமூகத்திலும் சைவ சாத்திர, தோத்திர அறிவைப் பரப்ப வேண்டியதன் அவசியமும் சுட்டிக்காட்டப்பட்டது. ஆலயங்கள் வெறும் வழிபாட்டுச் சடங்குகளோடு நின்றுவிடாமல், மெய்ஞ்ஞானத்தைப் புகட்டும் மையங்களாகவும், வன்முறை மற்றும் போதையற்ற அறநெறிச் சமூக உருவாக்கத்திற்கு முன்னுதாரணமாகவும் திகழ வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

மாநாட்டினைத் தொடர்ந்து அடுத்த நாள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சேர் பொன் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீட மாணவர்களின் சிறப்பு இசை மற்றும் நடன நிகழ்வுகள் இடம்பெற்றன. உயர்பட்டப் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் பூபாலசுந்தரம் ஐங்கரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இந்நிகழ்வில், இசைத்துறை மாணவர்களின் "திருமுறை இசை அரங்கு", "தமிழிசை அரங்கு" மற்றும் நடனத்துறை மாணவர்களின் "அரங்கேறிய தமிழ் வேதம்" நாட்டிய நாடகம் ஆகியவை மிகச் சிறப்பாக நடத்தப்பட்டன. தமிழர்களின் ஆன்மீக பண்பாட்டு மையமான யாழ்ப்பாண மண்ணில் நடைபெற்ற இம்மாநாடு, உலகெங்கிலும் வாழும் சைவ மக்களிடையே ஆன்மீக விழிப்புணர்வையும் சைவச் சிந்தனைகளையும் மீண்டும் புதுப்பிக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக அமைந்தது.

**திருச்சிற்றம்பலம்**

# பன்னாட்டு சைவ மாநாடு - 2026













# தமிழக சைவாதீன குருமகாசந்நிதானங்கள் தென்னாடு வருகை - ஆவணி 2026















# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 575 2551 / aathan@thennadu.org




# புற ஒளியும் அக ஒளியும்!

திருவிழாக்கள் இன்று கொண்டாட்டங்களாகிவிட்டன. ஆனால் அவை ஒரு சமூகத்தின் ஆன்மிக உணர்வையும், பண்பாட்டையும், ஒன்றிணைக்கும் ஐந்தொழில் தத்துவ நிகழ்வாகும் என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும். கோயில் திருவிழாக்கள் மக்களை இறைநம்பிக்கையோடும் சமூக ஒற்றுமையோடும் இணைக்க வேண்டியவை. ஆனால், காலப்போக்கில் இன்று சில திருவிழாக்கள் பத்தியை விட ஆடம்பரத்தையும், ஆன்மிகத்தை விட வெளிப்புறக் காட்சியையும் முன்னிறுத்தும் நிலைக்கு நகர்ந்து வருவது கவலைக்குரியது.

**“கடவுள் ஆடம்பரத்தை விரும்புகிறாரா?”** என்ற அடிப்படையான கேள்வியை நாம் ஒவ்வொருவரும் கேட்டுக்கொள்ள வேண்டிய தருணம் இது.

இறைவனுக்கு விலை உயர்ந்த அலங்காரங்களோ, கண்களைக் கூசச் செய்யும் மின்னொளிகளோ, பிரமாண்டமான அலங்கார தோரணங்களோ தேவையானவை அல்ல! சைவ மரபின் ஆழத்தைப் பார்க்கும்போது, இறைவனை அடைவதற்கான வழி எளிமையிலும் அன்பிலும் உள்ளத் தூய்மையிலும் இருப்பதை நமது சமயம் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறது. இறைவனுக்கு நாம் படைப்பது எவ்வளவு பெரியது என்பது முக்கியமல்ல ஆனால் எத்தகைய உள்ளத்துடன் படைக்கிறோம் என்பதே முக்கியம்.

திருவிழாக்களில் அலங்காரங்களும் ஒளியமைப்புகளும் இருக்கக்கூடாது என்பதல்ல. அவை விழாவின் அழகையும் மக்களின் மகிழ்ச்சியையும் அதிகரிக்கலாம். ஆனால், அவை பத்தியின் அளவுகோலாக மாறக்கூடாது. “எங்கள் விழா மற்றவர்களின் விழாவைவிட பிரமாண்டமாக இருக்க வேண்டும்” என்ற போட்டி மனப்பான்மை உருவாகும்போது, ஆன்மிகத்தின் இடத்தை ஆடம்பரம் பிடித்துக்கொள்கிறது.

சமீபத்தில் பிரான்பற்று முருகமூர்த்தி கோயிலில் நடைபெற்ற நிகழ்வின்போது ஏற்பட்ட மின்னொளித் தாக்கத்தால் பலர் கண் பாதிப்புக்குள்ளானதாக வெளியாகியுள்ள செய்திகள் மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளன. ஒரு திருவிழா மக்களுக்கு மகிழ்ச்சியையும் இறையனுபவத்தையும் வழங்க வேண்டுமே தவிர, மருத்துவமனையின் கதவைத் தேடும் நிலையை ஏற்படுத்தக் கூடாது.

இது குறிப்பிட்ட ஒரு ஆலயத்தையோ, ஏற்பாட்டாளர் களையோ குற்றம் சாட்டுவதற்கான சந்தர்ப்பமல்ல. மாறாக, நமது திருவிழாக்களின் ஏற்பாட்டு முறைகள் குறித்து ஒட்டு மொத்தமாகச் சிந்திக்க வேண்டிய கூட்டுப்பொறுப்பாண்மையைக் கட்டியெழுப்ப வேண்டிய காலமாகும்.

ஆலய நிர்வாகங்கள், ஏற்பாட்டாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் பத்தர்கள் அனைவரும் பாதுகாப்பை முதன்மைப்படுத்த வேண்டும். மின்னொளி, ஒலியமைப்பு, மின்சார இணைப்புகள், கூட்ட நெரிசல், அவசர வெளியேற்றப் பாதைகள் போன்ற ஒவ்வொரு விடயத்திலும் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

ஆடம்பரம் குறைந்தால் திருவிழா சிறிதாகிவிடாது. மாறாக, பத்தி பெருகும். செலவு குறைந்தால் இறைவனின் அருள் குறைந்துவிடாது. எளிமை நிறைந்த வழிபாடுகளை ஓதுவார்களின் தேவாரப் பண்ணிசையோடு இன்னும் அழகாக்கலாம். பத்தியைப் பெருக்கிப் பரப்பலாம். அக வொளிக்கு அதுவே நெய்யாகும்.

ஆடம்பரங்களுக்கு மேலாகப் பத்தியும் பண்பாடும் அழகுற மிளிரும் நல்லூர் கந்தசுவாமி ஆலயப்பெருந்திருவிழாக்களில் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை பல உள! எனவே புற ஒளிக்கு முக்கியத்துவம் தராது அகவொளியை அணையாது.

**சுடரச்செய்யும் வகையில் சிந்திப்போமாக!**

**திருச்சிற்றம்பலம்**

# சிவபுராண விளக்க உரை



(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

ஆணவ மலத்தின் சத்தியாகிய ஆவாரகச் சத்தி உயிரின் அறிவை மறைக்கும். மாயை மயக்கும்.

**மூடிய:-** ஆன்மாவிற்கு அறிவு, இச்சை, செயல் உண்டு. அந்த அறிவு, இச்சை, செயல் ஆணவமலத்தால் மூடப்பட்டு இருக்கிறது.

**"அழுக்கு மெய் கொடு உன் திருவடி அடைந்தேன்**
**அதுவும் நான் படப் பாலது ஒன்று"**

நான் மாசுடைய உடம்பை வைத்துக் கொண்டு உன் திருவடியை அடைந்தேன். அந்த மாசு என்னால் வந்ததே என்கிறார் சுந்தரமூர்த்தி நாயனார்.

**"புன்புலால் யாக்கை புரை புரை கனியப்..."** என்று உடம்பைப் பற்றி கூறுகிறார் மணிவாசகர்.

மேலும் இந்த உடம்பு பற்றி நாலடியாரில்,

**"ஈச் சிறகு அன்னது ஓர் தோல் உறினும் வேண்டுமே**
**காக்கை கடிவது ஓர் கோல்"**

ஈயின் சிறகு போன்ற மெலிதான தோல் உறிந்தால் ஈக்கள் அதை மொய்க்கும் அதை ஓட்ட காக்கையை ஓட்ட பயன்படுத்தும் கோலைக் கொண்டு ஓட்ட வேண்டும் என்று கூறுகின்றார். உடம்பின் நிலையாமையை பற்றி இப்படி கூறுகிறார்.

**மாய இருளை:-** சிவஞானபோதம் சிறப்பு பாயிரத்தில்

**"மலர்தலை உலகின் மாயிருள் துமியப்"**

**"மாயிருள்"** என்பதைவினைத்தொகையாகக் கொண்டு, மாயந்த இருள், மாய்கின்ற இருள், மாயும் இருள் என்று கூறுகிறார். மேலும் புற இருளை சூரியன் நீக்குவது போல ஆக இருளாகிய ஆணவம் மலத்தை **"உயர் சிவஞானபோதம்"** என்ற நூல் தீர்க்கும் என்கிறார்.



பேராசிரியர் சித்தாந்த சைவச் சுடர்மணி
மீ.சிவசண்முகம்,
கோயம்பத்தூர்,
தமிழ்நாடு.

ஆணவமலம் அழியாத பொருள். ஆனால் அதன் வலிமையை குன்றச் செய்பவர் சிவபெருமான்.

**மாயம்** - அழிவற்ற தன்மை

**இருள்** - ஆணவமலம்

தடை மந்திரத்தால் (ஐந்தெழுத்தால்) தடுக்கப்பட்டபோது, நெருப்பு தனது சுடிதற் சத்தி மடங்கி நிற்றல் போல, ஞானத்தால் தடுக்கப்பட்ட காலத்தில் தனது மறைத்தற் சத்தி மடங்கி நிற்றலே ஆணவ மலத்திற்கு நீக்கமாகும். இதனையே இங்கு மாய்த்தல் என்றார்.

**52)." அறம், பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி"**

அருங்கயிற்றினால் கட்டி என்பது முதல் 'நலம்தான் இலாத சிறியேர்க்கு நல்கி" என்பது வரையில் உள்ள ஏழு வரிகளால் ஆணவச் சேற்றில் இருந்து உயிரை எடுக்க இறைவன் செய்த உபகாரங்களை தெரிவிக்கிறார்கள்.

புண்ணிய பாவங்கள் பிரவாக நதியாகப் (நதியில் நீர் தொடர்ந்து ஓடுவது போல) பிறவிகள் தோறும் தொடர்ந்து வருதலின் அவற்றை அரிய கயிறாக உருவகித்தார். இக்கட்டை அவிழ்ந்தாலன்றி உயிர்கள் வீடு பேறு அடையாது. வினைக்கட்டை அவிழ்க்கும் ஆற்றல் பரம கருணாநிதி ஆகிய இறைவன் ஒருவருக்கே உண்டு. கட்டியவன் தான் அவிழ்க்க வேண்டும்.

**"இரு வினை பாச கயிற்றின் வழியே ஆட்டுவிப்பவனும் ஒருவன் உண்டோ தில்லையம்பலத்தே"**

**(திருவெண்காட்ட அடிகள்)**

**"பற்றித் தொடரும் இருவினை புண்ணிய பாவமுமே"** ஆதலின் அருங் கயிறு என்று அருளியது. என்பது மகாவித்வான் தண்டபாணி தேசிகர் உரை.

அறம், பாவம் என்றதனால் கன்மமலம் கூறினார். இது அருணையார் உரை.

நல்வினை, தீவினை என்ற கயிற்றால் உடம்பை கட்டி உள்ளார். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான கட்டு, அவரவர் வினைவலியே அவரவர் வந்தனர்.

**"அவரவர் வினை வழியே அவரவர் அனுபவம்"** என்று கூறுகிறது சிவபோகசாரம்.

**53)."புறந்தோல் போர்த்து, எங்கும் புழு வழுக்கு மூடி"**

வெளியே தோலை போர்வையாக இட்டு, புழுவையும் அழுக்கையும் வெளித்தோன்றாத வண்ணம் மறைத்தான்.

இவ்வுடல் புழுவும் அழுக்கும் நிறைந்தது. ஒன்பது ஓட்டைகளின் வழியாகவும் மலமும், நீரும், பீளையும், குரும்பியும், சளியும் ஆக அருவருக்கத்தக்க பொருள்களைச் சொரிவது. அத்தகைய உடலைப் பிறர் அருவருக்கா வண்ணமும், சிதையா வண்ணமும் தோலை போர்த்தி வினைக் கயிற்றால் கட்டி வைத்தான் இறைவன் என்று அருளுகின்றார்கள் என்பது மகாவித்துவான் தண்டபாணி தேசிகர் உரை,

**போர்த்து:-** போர்க்குமாற்றால். எங்கும் உள்ள என்க. புழுவையும், அழுக்கையும் என எண்ணும்மை விரிக்க வேண்டும்.

**மூடி :-** மூடப்பட்ட

**54)."மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை"**

ஒன்பது வாயில்
கண்கள் இரண்டு,
காதுகள் இரண்டு,
மூக்கிரண்டு,
வாய் ஒன்று,
கருவாய் ஒன்று,
எருவாய் ஒன்று

**மலம்:-** அழுக்கு

**சோரும்:-** வடிகின்ற

என் குருநாதர் ஒன்பது துவாரங்களில் அருவருக்குத்தக்கப் பொருள் வரும்போது வாயிலிருந்தாவது இனிமையான சொற்கள் வரட்டும் என்பார். என்பது அருணையார் உரை.

**55)."மலங்க புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய"**

**மலங்க:-** யான் கலங்க.

பொறி வசப்படுகின்ற வரையிலே யான் இவ் உடலை பெற்றது. இறைவனை வணங்கி ஈடேற என்ற எண்ணமே உடையன் ஆகினேன். புலன்கள் ஐந்தும் என்னை கலங்கடிப்பதற்காக வஞ்சனையைச் செய்தன. வஞ்சனையாவது ஒவ்வொரு புலனும் தம்மால் வரும் இன்பமே பெரிதென செய்து மயங்குதல். யான் இவ்வண்ணம் புலன்களால் கலங்கித் தடுமாறும் வேளையில், பெருமான் குரு மூர்த்தியாக நிலத்தின் மேல் வந்தார் அருள் செய்தார் என்கின்றார். இது

**"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத் தம் முதல் குருவுமாய் தவத்தினின் உணர்த்தவிட்டு, அந்நியமின்மையின் அரன் கழல் செலுமே"** என்ற சிவன்ஞானபோதக் கருத்தை விளக்குதல் காண்க. என்பது தண்டபாணி தேசிகர் உரை.

**மலங்க:-** யான் மனம் கலங்கும்படி

**புலன்:-** பொறிகள் வஞ்சனையாவது நலம் செய்வது போல காட்டி வினைகளில் வீழ்த்துதல் என்பது அருணையார் உரை.

**மலங்குதல்:-** கலங்கினேன்

**"மலங்கினேன் கண்ணின் நீரை மாற்றி**
**மலம் கெடுத்த பெருந்துறை"** என்கிறார் மணிவாசகப் பெருமான்.

நன்மை செய்வதுபோல் இருக்கும் இந்த புலன்கள் வழி சென்றால் வினையை செய்வித்து நம்மை பிறப்பிற்கு தள்ளிவிடும். எனவே வஞ்சப்புலன் என்றார் உண்மை விளக்க ஆசிரியர்.

**"ஆசை தரும் ஐம்புலனே ஆம்"** என்றும் **"கள்ளம் மிகும் ஐம்புலனும் கட்டுரைக்கில்"** என்கிறார்.

ஆசையால் வினை செய்வோம். வினை பிறவிக்கு வித்தாகும் என்கிறார்.

**"ஆசை எனும் மூண்ட சுழி வந்து அமிழ்த்த"** என்கிறார் மாதவ சிவஞான யோகிகள் அகிலாண்டேஸ்வரி பதிகத்தில்.

**"மாறி நின்று என்னை மயக்கிடும் வஞ்சப்புலன் ஐந்தின் வழியடைத்து"**

என்பது திருவாசகம்.

வழிபாடு செய்ய செய்ய வஞ்சப்புலன்கள் அனைத்தும் தன் சேட்டையை விட்டு விடும். புலங்களின் வழியை இறைவன் அடைத்து விடுவார்.

**56)."விலங்கு மனத்தால் விமலா! உனக்குக்"**

விலங்கு மனத்தால் என்பதற்கு எதிர் நின்று தடுக்கும் மனத்தால் என உரைப்பாரும் உளர். சிறந்தது தெளிக. என்பது வித்வான் தண்டபாணி தேசிகர் உரை.

**விமலா:-** குற்றம் அணுக முடியாதவன்

**57)."கலந்த அன்பாகி கசிந்து உள்ளுருகும்"**

இறைவனை அன்பாக்கிக் கொள்ளுதல் கலந்த அன்பு. உண்மை அன்பு.

**கசிந்து:-** காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி

**"முகம்தான் தாரா விடின் முடிவேன்**
**பொன்னம் பலத்து எம் முழுமுதலே"**

என்று திருவடி தீட்சை கொடுத்தபின் உன் முகத்தை காணாமல் உன்னை நினைந்து உருகுகிறேன் என்கிறார் மணிவாசகர் கோயில் மூத்த திருப்பதிகத்தில்.

**(தொடரும்)**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான்தோழர்



“சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ்
வந்து பாடிய வண்ண முரைசெய்வோம்”
மகிழ மரத்தருகில் மலர்ந்த மாபெரும் தெய்விக உடன்படிக்கை

சங்கிலியார் அதிகாலைப் பொழுதில் இறைவரின் திருப்பள்ளியெழுச்சிக்கு மாலை தொடுக்கும் பொருட்டுத் தோழியருடன் ஒற்றியூர் திருக்கோயில் செல்கின்றார். அங்கு முன்னமே காத்து நின்ற சுந்தரனார், சங்கிலியாருக்கு அருகாமையில் சென்று இறைவர் முந்தைய இரவில் அருள் புரிந்ததை எடுத்துரைக்கின்றார். சங்கிலியார் நாணத்துடன் உட்செல்லத் தொடங்க, அவரைப் பின்தொடரும் நம்பிகள், “உமைப் பிரியேன் என்னும் வாக்கினைத் திங்கள் முடியாரின் திருமுன் அளிக்கப் போதுவீராக” என்று அழைக்கின்றார். இதனைச் சேக்கிழார் பெருமான் பின்வருமாறு பாடுகின்றார்:

அங்கவர்தம் பின்சென்ற ஆரூரர் ஆயிழையீர்
இங்குநான் பிரியாமை உமக்கிசையும் படிஇயம்பத்
திங்கள் முடியார் திருமுன் போதுவீர் எனச் செப்பச்
சங்கிலியார் கனவுரைப்பக் கேட்ட தாதியர் மொழிவார்
- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 257)

இறைவர் கனவில் உணர்த்தியதை அறிந்திருந்த தோழியர், **“இமையவர்கள் தலைவரின் திருமுன்னர் இவ்வுறுதியினைக் கூறுதல் முறையன்று”** என்கின்றனர். இறைவனின் திருவிளையாடலை அறியாத வன்தொண்டர், **“அவ்வாறாயின் பிறிதொரு இடத்தினைக் கூறுவீர்”** என வினவுகின்றார்.

எம்பெருமான் இதற்காக எழுந்தருளி இமையவர்கள்
தம்பெருமான் திருமுன்பு சாற்றுவது தகாதென்ன
நம்பெருமான் வன்தொண்டர் நாதர்செயல் அறியாதே
கொம்பனையீர் யான் செய்வ(து) எங்கென்று கூறுதலும்
- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 258)

தோழியர், **“தலவிருட்சமான மகிழ மரத்தருகில் உறுதி கூறினால் போதும்”** என்ன, வன்தொண்டர் திகைத்து, “முதலில் ஒப்புக்கொண்டு பிறகு மறுப்பது தகாது” என்று துணிந்து மகிழின்கீழ் செல்கின்றார்.

மாதர்அவர் மகிழ்க்கீழே அமையுமென மனமருள்வார்
ஈதலராகிலும் ஆகும் இவர்சொன்ன படிமறுக்கில்
ஆதலினால் உடன்படலே அமையுமெனத் துணிந்தாகில்
போதுவீரென மகிழ்க்கீழ் அவர்போதப் போயணைந்தார்
- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 259)

சங்கிலியார் காண, சுந்தரனார் அம்மகிழ மரத்தினை மும்முறை வலம் வந்து, **“இவ்விடத்தினின்று யான் அகன்று செல்லேன்”** என்று சூளுரைக்கின்றார்.

தாவாத பெருந்தவத்துச் சங்கிலியாரும் காண
மூவாத திருமகிழை முக்காலும் வலம்வந்து
மேவா(து) இங்(கு) யான்அகலேன் எனநின்று விளம்பினார்
பூவார்தண் புனல்பொய்கை முனைப்பாடிப் புரவலனார்
-(ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 260)

தலங்கள் தோறும் சென்று பாடுவதையே இயல்பாகக் கொண்ட நம்பிகள் இச்சபதத்தைச் செய்ததைக் கண்டு, **“இறைவன் ஆணையால் இங்ஙனம் நேர்ந்ததே,**

**இதனால் நம்ம தலைவர்க்கு யாது விளையுமோ?"** என்று சங்கிலியார் மனங்கலங்கி, ஆவி சோர்ந்து ஒருமருங்கு ஒதுங்கி அயர்கின்றார்.

**மேவியசீர் ஆரூரர் மெய்ச்சபத வினை முடிப்பக்**
**காவியினேர் கண்ணாரும் கண்டுமிக மனம்கலங்கிப்**
**பாவியேன் இதுகண்டேன் தம்பிரான் பணியால்என்(று)**
**ஆவிசோர்ந்(து) அழிவார் அங்கொரு மருங்கு மறைந்(து) அயர்ந்தார்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 261)**

இவ்வாறு, இறைவனின் திருவிளையாடலால் மகிழ மரத்தடியில் நிகழ்ந்தேறிய இச்சபதம், சுந்தரரின் அளப்பரிய பத்தியையும் அடியார்களிடையே எழும் தெய்விக உணர்வு களையும் அழகாகப் புலப்படுத்துகின்றது.

### ஒற்றியூர் இறைவரின் அருளாசியோடு சங்கிலி நாச்சியாருடன் திருமண நிகழ்வு

சுந்தரனார் அதிகாலைப் பொழுதில், ஒற்றியூர் ஆலய மகிழ மரத்தருகில் **"உனைப் பிரியேன்"** என்று சங்கிலியாருக்குச் சபதம் செய்து வாக்களிக்கின்றார். அடியவர்களின் வாழ்வை நல்வழிப்படுத்தும் ஆதிபுரீஸ்வரப் பரம்பொருள், அன்றைய இரவுப் பொழுதிலேயே திருவொற்றியூர் வாழ் திருத்தொண்டர்கள் அனைவரின் கனவிலும் ஒரே நேரத்தில் எழுந்தருளித் தோன்றி அருளுகின்றார். இதனைச் சேக்கிழார் பெருமான் பின்வருமாறு விவரிக்கின்றார்:

**அன்றிரவே ஆதிபுரி ஒற்றிகொண்டார் ஆட்கொண்ட**
**பொன்திகழ்பூண் வன்தொண்டர் புரிந்தவினை முடித்தருள**
**நின்றுபுகழ்த் திருவொற்றியூர் நிலவு தொண்டருக்கு**
**மன்றல்வினை செய்வதற்கு மனம்கொள்ள உணர்த்துவார்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 264)**

அப்பதியிலுள்ள தொண்டர்களிடம் பெருமான், **"நம்பியாரூரனுக்கு நங்கை சங்கிலியைச் சிறப்புடன் மணஞ்செய்து, விண்ணுலகிலுள்ள தேவர்களும் அறியுமாறு அளிப்பீர்களாக"** என்று ஆணை தந்தருளுகின்றார். அத்தொண்டர்களும் ஆலமுண்ட அண்ணலின் திருவாக்கினைச் சிரமேற்கொண்டு பேரானந்தத்துடன்



விழித்தெழுகின்றனர்.

**நம்பியாரூரனுக்கு நங்கை சங்கிலி தன்னை**
**இம்பர் ஞாலத்திடைநம் ஏவலினால் மணவினைசெய்(து)**
**உம்பர்வாழ் உலகறிய அளிப்பீர் என்றுணர்த்துதலும்**
**தம்பிரான் திருத்தொண்டர் அருள்தலைமேல் கொண்டெழுவார்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 265)**

சிவபெருமானின் அருளாணையைச் சிரமேற்கொண்ட திருவொற்றியூர் வாழும் எண்ணற்ற திருத்தொண்டர்களும், அத்தலத்து மக்களும் ஒன்று கூடினர். விண்ணுலகில் உள்ள தேவர்கள் மலர்மழை பொழிய, மண்ணுலகோர் அகமகிழ்ந்து போற்ற, வன்தொண்டனாருக்கும் சங்கிலி நாச்சியாருக்கும் அருள்மண வேள்வியினைக் மங்கல யோகத்தில் சிறப்புற நடத்தி முடித்தனர்.

**மண்ணிறைந்த பெரும்செல்வத் திருவொற்றியூர் மன்னும்**
**எண்ணிறைந்த திருத்தொண்டர் எழிற்பதியோர் உடனீண்டி**
**உண்ணிறைந்த மகிழ்ச்சியுடன் உம்பர் பூமழை பொழியக்**
**கண்ணிறைந்த பெரும்சிறப்பில் கலியாணம் செய்தளித்தார்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 266)**

இவ்வாறு, இறைவனின் திருவருளினாலும், தொண்டர் களின் எல்லையற்ற பத்தியினாலும் நடந்தேறிய இத்திரு மணத்திற்குப் பின், சுந்தரர் சங்கிலி நாச்சியாருடன் திருவொற்றி யூரிலேயே தங்கி ஈசனைத் தொழுது இன்புற்றிருந்தார்.

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**படம்-தேவராஜன் நடராஜன்**

# சிவபூமியில் சிவனைத் தேடி

## கி.பி 12 ஆம் நூற்றாண்டு காலத்தில் குருணாகல் மாகல் கிராமத்தில் சோழராட்சியில் சிறப்புப் பெற்ற சிவன் கோயில் விக்கிரமசலாமேக ஈசுவரம்



பிராமிக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள கற்குகைகளில் ஒன்று

குருணாகல் – புத்தளம் வீதியிலிருந்து ஒருமைல் தூரத்தில் புதுமுத்தாவ என்னும் ஊர் அமைந்துள்ளது. அவ்வூரின் அருகே ஒரு பெருங்குளம் அமைந்துள்ளது. அவ்வூரையும் குளத்தையும் அந்நாளில் மாகலவாவி, மாகல என்னும் பெயர்களால் அழைத்துள்ளனர். பின்பு 12 ஆம் நூற்றாண்டில் முதலாம் பராக்கிரமபாகுவினால் இக்குளம் திருத்தி அமைக்கப்பட்டு, நீர்ப்பாசனவசதிகளும், விவசாயமும், போக்குவரத்துப்பாதையுமாக மாகல் படிப்படியாக விருத்தி கண்டது. அவனுடைய ஆட்சிக் காலத்தில் திருத்தியமைக்கப்பட்ட குளம் மாகலவாவி என்று அழைக்கப்பட்டது.

சோழர்கள் இலங்கையில் ஆதிக்கம் செலுத்திய கால கட்டத்தில் மாகலில் படைத்தளம் அமைத்திருந்தனர். பொலன்நறுவையில் பதவியா நகரில் சோழராதிக்கத்தில் ஐந்நூற்றுவரின் வணிக கணம் ஒன்று எவ்வாறு உருவாகி செல்வாக்குப் பெற்றதோ அதே போல மாகலிலுஞ் அவ் வணிககணம் ஒன்று உருவாகி செல்வாக்குப் பெற்றிருந்தது என்பதனை அங்குள்ள சாசனங்களாலும் பிற தொல்பொருட் சின்னங்களாலும் அறிய முடிகின்றது.

### இரசமகாவிகாரையும் புராதனமான சைவக் கோயிலும்

கி.பி 17ஆம் நூற்றாண்டிலே இரசமகாவிகாரை அமைக்கப்பட்டபோது அங்கு மிகப் புராதனமான சைவக்கோயில் இருந்தமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. சைவக் கோயிலின் கட்டட உதிரிப்பாகங்கள் இவ் விகாரையின் கட்டடத்தில் ஆங்காங்கு காணப்படுகின்றது. குறிப்பாக விகாரையின் பிரதிமாகரத்தின் சுவர் ஒன்றிலே சிவலிங்கம் ஒன்று காணப்படுகின்றது.

விகாரையின் பின்புற மண்டபத்தில் நடப்பட்ட தூண் ஒன்றில் 12 ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பெற்ற தமிழ்க் கல்வெட்டொன்றும் காணப்படுகின்றது. அவை முதலாம் பராக்கிரமபாகுவின் தந்தையான மானாபரணனின் காலத்தவை என்று கணிக்கப்படுகிறது.

### வணிககுலமும் விக்கிரமசாலாமேகபுரமும்




சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு


மாகலானது 12 ஆம் நூற்றாண்டிலே ஒரு நகரமாகிப் புனர் நாமம் பெற்று விளங்கியதை பல சாசனச் சான்றுகள் வாயிலாக உணர்ந்து கொள்ளலாம். இரசமகாவிகாரையில் காணப்படும் அரசமரத்தின் கீழ் நீள் சதுரவடிவமான கல் ஒன்றிலே தமிழ் எழுத்துக்களாலான வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது. அக்கல் தற்போது இவ் விகாரையின் சுவரின் பாகமாக அமைத்துள்ளனர். இச் சாசனத்தை 1997 ஆம் ஆண்டு இனம்கண்டு ஆராய்ந்து ஈழத்து வரலாற்றுப் பெருந்தகையான சி.பத்மநாதன் அவர்களும், ஜப்பானியப் பேராசிரியர் 'நொபோரு கராஷிமா' (ழேடிழசர முயசயளாஅை) அவர்களும் அவ் வாசகத்தைப் படியெடுத்து, இது ஐந்நூற்றுவரின் மெய்க்கீர்த்தி என்றும், அவ்வணிக கணத்தால் உருவாக்கப்பட்ட நகரம் விக்கிரகமசலாமேகபுரம் என்றும் அறுதியாகிக் கூறினர்.

அதுமட்டுமன்றி ஐந்நூற்றுவரின் வணிக குலத் தெய்வமாக ஐய்யப்பொழில் புர பரமேஸ்வரி திகழ்ந்தாள் என்ற செய்தியும் கீழ்வரும் சாசன வரியினுள் குறிப்பிடப்பட்டுள்ளது.

**"ஸ்வஸ்தி ஸ்ரீஸமஸ்த புவநாஸ்ரய**
**பஞ்சஸத வீரசாஸத லக்ஷ்மீலங்க்ரித**
**வக்ஷஸ்தல (புவன பராக்ரம) ஸ்ரீ வாததேவ**
**கண்டளி மூலபத்த் ரோத்பவ.....**
**ஸ்ரீஐய்யப் பொழிற்புர பரமேஸ்வரிக்கு**
**மக்களாகிய மாகலான விக்கிரம**
**சலாமேகபுரத்துப் பெருமக்கள்...."**

இச் சாசனம் விக்கிரமசாலமேகபுரம் பற்றிய செய்தியைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. இங்குள்ள பெருமக்கள் அந்நகரத்தின் ஆளுங்கணத்தவர்கள் என்று ஊகிக்கப்படுகின்றது. விக்கிரமசால மேகபுரம் சுயாட்சியுரிமை பெற்ற நகரம் என்பது இதனால் தெரிய வருகின்றது. இதனாலேயே நகரத்துப் பெருமக்களை "ஐய்யப் பொழில்புர பரமேஸ்வரிக்கு



நாக மன்னன் பற்றிக் குறிப்பிடும் பிற்கால பிராமிக் கல்வெட்டு



மக்களாகிய" வரென்று சாசனம் குறிப்பிடுகின்றது.

அப்பெருமக்கள் வணிக கணத்தைச் சேர்ந்தவர்கள் என்பது உணரப்படும் என்று பேராசிரியர் சி.பத்மநாதன் இலங்கையில் இந்துசமயம் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். எனவே வணிகநகரமான மாகல் பின்னாளில் விக்கிரம சலாமேகபுரமாகியது. இவ்வாறு பழைய ஊர்களின் பெயர்களோடு புதிய பெயர்களையும் சேர்த்துப் பேசுவது வழக்கமானது. உதாரணமாக மாதோட்ட நன்னகர் பின்நாளில் ராஜராஜபுரம் புலையமங்கலம் என்றும் பேசப்பட்டதைக் குறிப்பிடலாம்.

### விக்கிரமசலாமேக ஈசுவரம்

விக்கிரமசலாமேகபுரம் எனும் வணிக நகரத்தில் அமையப்பெற்ற சிவன்கோயில் ஆகையால் விக்கிரம சலாமேக ஈசுவரம் என்ற திருநாமத்தைப் பெற்றுள்ளது. இக் கோயில் மானாபரணின் காலத்தில் செல்வாக்குப் பெற்ற கோயிலாக இருக்கலாம். மானாபரனின் தேவியான சுந்தமல்லி இக்கோயிலுக்கு தானங்கள் கொடுத்த வரலாறும் பேசப்படுகின்றது. அச்சாசனம் மேல்வருமாறு இராசமகாவிகாரை மண்டபத் தூணில் பொறிக்கப்பட்டுள்ளது. இத் தூண் முன்பு விக்கிரமகலாமேகபுரத்து ஈசுவரன் கோயிலின் மண்டபத் தூண்களில் ஒன்றாக இருந்தவையாகும்.

**"ஸ்ரீஜயபாகு தேவர்க்கு யாண்டு எட்டாவது**
**பாண்டியனார் வீரப்பெருமாள்**
**நம்பிராட்டியார் கொலோத்துங்க**
**சோழதேவர் திருமகளார் சுந்தவல்லியாழ்வார்**
**மாகலான விக்கிரமசலாமேகபுரத்து**
**விக்கிரமசலோமுக ஈஸ்வரம் உடையார்க்கு**
**சந்திராதித்தவற் நின்றெரிய இட்ட**
**திருநந்தா விளக்கொன்றுக்கு யிட்ட**
**காசுபத்து, மூன்று சாண் நீளத்**
**தாராநிலை விளக்கு ஒன்று"**

இத் தூண் சாசனத்தின் படி சுந்தமல்லி அரசியார் இந்நகரத்தில் அமைந்த சிவாலயத்திற்கு தினமும் நின்று கொண்டு எரிவதற்கு நந்தா விளக்கு ஒன்றினையும், பத்துக் காசினையும், மூன்று சாண் நீளமான தாராநிலை விளக்கொன்றினையும் தானமாக வழங்கினாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு அரச குடும்பத்தாரின் கவனத்தையும், மதிப்பையும் பெற்ற கோயிலாக விளங்கி யுள்ளது. இச் சாசனம் ஏறத்தாள 12 ஆம் நூற்றாண்டுக் குரியதாகக் கணிக்கப்பெற்றுள்ளது. ஆதலால் சோழராட்சிக் காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த கோயிலாகவும் விளங்கியுள்ளது.

மற்றுமொரு மண்டபத் தூண் ஒன்றிலே மாகலில் கம்மாளருக்கும் வண்ணாருக்கும் இடையில், கம்மாளரின் ஈமச்சடங்கு புரிவதற்கு வண்ணார் உடன் படாமையில் ஒரு தகராறு ஏற்பட்ட சமயத்தில் வீரபாகு என்னும் பட்டப் பெயர் கொண்ட மானாபரணனின் பஞ்சபிரதானிகள் என்னும் உயர் அதிகாரிகள் இத்தகராரை விசாரித்து, அவர்களுக்கு வழங்கிய தீர்ப்பின் வாசகத்தை அரச ஆணையாகச் சிலாசாசனஞ் செய்து விக்கிரமசலாமேக ஈசுவரத்திலுள்ள தூணில் பொறித்து வைத்துள்ளனர். அச்சாசனத்தின் பகுதி ஒன்று மேல்வருமாறு அமைந்துள்ளது.

**"ஸ்வஸ்தி ஸ்ரீ அபைய சலாமேக சக்கரவர்த்தி**
**கள் ஸ்ரீ ஜயபாகு தேவற்கு யாண்டு**
**எட்டாவது பங்குனி முன்நாலாம் பக்கம்**
**ஸ்ரீவீரபாகுதேவர் பஞ்சபிரதானிகள்**
**பூர்வாசாரம் விசாரணை பண்ணிக் கம்மாளருக்குக்**
**கோட்ட சளுவும் பாவாடையும் முகத்தீடும்**
**ஏறுகைக்குக் காரணங் கண்டு,**
**நாயனார் ஸ்ரீ வீரபாகு தேவர் எழுத்து**
**யுகாந்திரம் அளவும் நிற்பதாக அருளி**
**இக் கல்லு வெட்டுவிச்சேன்......."**

இச்சாசனத்தின்படி விக்கிரமசலாமேகபுரத்தில் கம்மாளர், வண்ணார், அரச அதிகாரிகளான பஞ்சப்பிரதானிகள் வாழ்ந்துள்ளனர். இன்னும் சில சாசனங்களில் வீரக்கொடி, லோகப்பெருஞ் செட்டியார், வீரமாகாளர், வைஸ்ராவணர் போன்றோர்களும் இவ் வணிக நகரத்தில் வாழ்ந்திருந்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே ஈசுவரன் கோயிலோடு வணிகர்களும், பிரதானிகளும், குலமக்களும் தொடர்பில் இருந்துள்ளனர். அவர்களின் ஆதரவுகள் அக்காலச் சமய கலாசார நடவடிக்கைகளோடு பிணைந்திருந்தமையும் தெரிய வருகின்றது.

சோழராட்சிக் காலத்தில் மாகலான விக்கிரமசலாமேகபுரம் ஒரு வணிக நகரமாக மட்டுமன்றி, சோழரின் படைத்தளமாகவும் விளங்கியதோடு, சைவக்கோயில், அம்மன் கோயில், செட்டியாகிய முருகன் கோயில் என்பவற்றுடன் பௌத்த பள்ளியும் அருகருகில் அமைந்து அச்சமய மரபுகளிடையே பரஸ்பரத் தொடர்புகளும் ஆரோக்கியமாக ஏற்பட்டிருந்தன.

**திருச்சிற்றம்பலம்**

# ஈழத்துச் சித்தர்கள்

# கடையிற் சுவாமிகளும் சீடர்களும்



சித்த வைத்தியர்
கணேஸ் கபிலன்
(யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்)

**(சென்ற திங்கள் தொடர்ச்சி)**

மேலும் கடையிற் சுவாமிகளைப் பற்றிய நூல்களில் எல்லாம் பெரியகடைப்பகுதி, மண்டைதீவு, நீராவியடி இவ்விடங்களிலே அவர் உலாவியதாக கூறப்படுகின்றது. ஆனால் அவர் வடமராட்சிப்பகுதியிலும் முக்கியமாக புலோலியிலும் அவர் அடிக்கடி போய்வருவதாக கூறப்படுகின்றது. அக்குறிப்புகள் கீழே.

செல்லத்துரை சுவாமிகள் அவர்கள் தொகுத்த யோகசுவாமிகள் வாழ்க்கையும் வழிகாட்டுதலும் என்ற நூலில் புலோலியைச் சேர்ந்த திருமதி பத்மாசனி இராஜேந்திரா அவர்கள் யோகர் சுவாமிகளைப் பற்றி எழுதிய என்னைக் கணமும் பிரியாத இறைவன் என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் " எங்கள் வீட்டில் கடையிற் சாமியார், வாரிடப்பரதேசியார், தூத்துக்குடிச் சாமியார் ஆகிய பெரியோர்கள் வந்து தங்கியிருந்து சென்றமையைக் குறித்தும் அவர்களுடைய அருட்செயல்களைக் குறித்தும் எனது முன்னோர் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆகவே இந்தக் கொழும்புத்துறை யோகர் என்ற பெரியாரையும் நான் காணத் தகுந்த ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமோ என்னும் அவாவானது என் உள்ளத்தில் இடம் பெற்றது." என்று கூறியுள்ளார்.

மேலும் பருத்தித்துறை ஆத்தியடிப்பிள்ளையார் கோயில் மிகவும் பழைமையான பிள்ளையார் கோயில். இக்கோயிலில் கடையிற் சுவாமிகளின் திருவுருவச்சிலை வெளியில் வைக்கப்பட்டுள்ளது. அக்கோயில் வரலாறு கூட கடையிற் சுவாமிகளுடன் தொடர்புபட்டதாக கூறப்படுகின்றது. போர்த்துக்கேய காலத்தில் உடைக்கப்பட்ட கோயில் கருவறை விக்கிரத்தை ஒரு கொட்டில் அமைத்து வழிபட்டு வந்தனர். கோயில் திரும்ப அமைப்பதற்கு நிலையம் எடுத்துக் கொடுத்தவர் கடையிற் சுவாமி என்று கூறப்படுகின்றது. வெள்ளம் ஓடுகின்ற வாய்க்காலுக்கு அருகில் கறையான் புற்றுடன் கூடிய திருவாத்தி மரத்தடியிலே அவரின் கூற்றின்படி கோயில் அமைக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

மேலும் ஏற்கனவே வல்வெட்டித்துறையைச் சேர்ந்த



தண்டேல் என்ற சுவாமியின் சீடர் பற்றி எழுதியிருந்தேன். இவை சுவாமி வடமராட்சிப் பகுதியிலும் உலாவியுள்ளார் என்பது உறுதியாகின்றது. இவை தவிர கடையிற் சுவாமிகளுடன் தொடர்புடைய கோயில்கள், நிறுவனங்கள் சில உள்ளன. ஏற்கனவே மண்டைதீவு முகப்புவயல் கந்தசுவாமி கோயில் (ஐயன் கோயில்) மற்றும் பருத்தித்துறை ஆத்தியடி பிள்ளையார் கோயில் பற்றி ஏற்கனவே எழுதியிருந்தேன்.

**( 1 ) கன்னாதிட்டிப் பிள்ளையார்** - கன்னாதிட்டிக்காளி கோயிலுக்கு முன்னால் மருதமரத்தின் கீழ் ஒரு சிறு பிள்ளையார் கோயில் உள்ளது. அக்கோயில் கடையிற் சுவாமிகளுடன் தொடர்புபட்டதாக கூறப்படுகின்றது. அதன் அருகே உள்ள குளமும் அவருடன் தொடர்புபட்டதே.

கன்னாதிட்டிக்குளம் என்று கூறப்படும் இக்குளம் நல்லான் குளம் என்றே ஆரம்பத்தில் கூறப்படுகின்றது. இக் குளத்தில் கடையிற் சுவாமிகள் நீராடி வந்துள்ளதாகவும்,

அதன் அருகே உள்ள பிள்ளையார், சுவாமிகளின் வேண்டுகோளிற்கமையவே வெண் வைரக்கல்லில் பொழிந்து நிலைப்படுத்தல் செய்யப்பட்டு அவரால் வணங்கப்பட்டு வந்ததாகவும் கூறப்படுகிறது. சிலர் கடையிற் சுவாமிகள் கல் எடுத்துக் கொடுத்து நிலைப்படுத்தல் செய்த பிள்ளையார் என்றும் கூறப்படுகின்றது.

**(2) நீராவியடி நடேசர் கோயில்** - கடையிற் சுவாமிகள் இது தான்டா சிதம்பரம் என்று கூறிய இடத்தில் இக்கோயில் உருவானதாக கூறப்படுகின்றது.

கடையிற் சுவாமி இப்போது சமாதி கோயில் உள்ள இடத்தில் இருந்து தேசிக்காயை எறிந்து அந்த இடத்தை காட்டி இதுதான்டா சிதம்பரம் என்று கூறியுள்ளதாக கூறப்படுகின்றது. சிலர் அது தேசிக்காய் இல்லை விளாங்காய் என்றும் கூறுகின்றார்கள்.

**(3) கொட்டடி நமசிவாயம் பாடசாலையும்** கடையிற் சுவாமிகளுடன் தொடர்புபட்டதாக கூறப்படுகின்றது. பொன்னம்மாள் அம்மையார் கடையிற் சுவாமிகளின் ஆத்ம சீடர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது பரம்பரையில் வந்த கந்தையாச் செட்டியாரின் மகன் நமச்சிவாயம் செட்டியார் தான். இப் பாடசாலையை அமைத்தவர். கடையிற் சுவாமிகளின் திருவுருவப்படம் வைத்து இப்போதும் வழிபாடு நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

**(4) ஏழாலை சாதுசங்க மடம் / ஏழாலை** - சமயா சாரிய சுவாமிகள் ஆதீன மடம் (தற்போது ஏழாலை கருணாகரப்பிள்ளையார் கோயில்) இம் மடாலயமும் கடையிற் சுவாமிகள் மற்றும் அவரது சீடர் பரம்பரையுடன் தொடர்புபடுகின்றது. இம்மடம் பற்றி ஆத்மஜோதி முத்தையா அவர்கள் தன் ஏழாலை என்னும் நூலில் பின்வருமாறு கூறுகின்றார்.

"சொற்பகாலத்தில் அவ்வோலைக் கொட்டில் மாற்றப்பெற்று 1917 இல் பெருமளவிலான சாந்துக் கற்கட்டிடமொன்று அங்கு இடம்பெற்றுவிட்டது. அங்குக்கூடுவோரின் வழிபாட்டு வசதிப்பொருட்டாக, கடையிற் சுவாமிகள் கையிலிருந்து அவர்தம் சீடர்பரம்பரை வழியாக வந்த விநாயகர் திருவுருவமும் நிலைப்படுத்தலாயிற்று. முற்குறிப்பிட்டவாறு ஓய்வொழிவு நேரங்களில் அவ்விடத்தில் தலைக்காட்டி வந்த தேவதைகளின் நடமாட்டமும் ஆரவாரமும் இவ் நிலைப்படுத்தல் பின்பே முற்றாக அற்றொழிந்தன என்பர். அப்பொழுதைய விநாயகர் மூர்த்தி சிறிதாயினுங் கீர்த்தி பெரிதாயிருந்தமையின் அங்கத்தைய அடியாரொழுக்கம் நாளுக்குநாள் மேலோங்கிப் பின்னொருகால் பேருருத்திகழும் பேரருள் விநாயக மூர்த்தமொன்று அங்கு எழுந்தருளும் பேறும் உளதாயிற்று." அந்த விநாயகர் சிலை அதன் பின்னர் என்னவானது என்பது பலருக்குத் தெரியாத விடயம்.

**(5) உசன் சமாதி மடம் , உசன் பொன்னம்மாள் மடம்** - கடையிற் சுவாமிகளின் உத்தம சீடரான பொன்னம்மாள் அம்மையார் உடன் தொடர்புபட்டது தான் பொன்னம்மாள் மடம். இவை பற்றிய சில தகவல்கள் ஏற்கனவே எழுதியிருந்தாலும் உசன் சம்பந்தமாக வெளிவந்த நூல்களில் உள்ள குறிப்புகளை இங்கு எழுதுகின்றேன். வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு நூலில் வந்த சில குறிப்பு. ஆனால் இதிலுள்ள சில குறிப்புகள் தவறாக உள்ளது.

### உசன் சமாதி மடம்

சுன்னாகத்தில் நடராசாச் செட்டியார் என்னும் ஒருவர் இருந்தார். இவர் யாழ்ப்பாணம் பொன்னம்மா மில் உரிமையாளரான பொன்னம்மாவின் சகோதரர். இவருக்கு சிந்தாமணி, மாணிக்கத்தம்மா, மங்களம் ஆகிய மூன்று பிள்ளைகள் இருந்தனர். இவர்களில் சிந்தாமணி, மாணிக்கத்தம்மா ஆகியோர் ஆத்மீகத்துறையில் ஈடுபாடுடையவர்களாக இருந்தார்கள். இவர்கள் இருவரும் ஏழாலையில் இருந்த சடைவரத சுவாமியினது சீடர்களாக இருந்து தியானம் கூட்டுப்பிரார்த்தனை என்பவற்றில் ஈடுபாடு காட்டி வந்தனர். இவர்கள் துறவு வாழ்வில் ஈடுபட்டனர். சடைவரத சுவாமிகள் மாணிக்கத்தம்மாவின் பெயரை மங்கயற்கரசியாக மாற்றினார். மங்களம்மாவை தந்தையார் நடராசாச் செட்டியார் திருமணம் செய்து வைத்தார். மங்கயற்கரசியும், இவர் சகோதரி சிந்தாமணியும் தங்களுக்கு அமைதியான ஓர் இடத்தில் காணி வாங்கி, இதில் ஓர் மடத்தையும் கட்டித்தருமாறு தந்தையார் நடராசாச் செட்டியாரைக் கேட்டனர்.

இதன் பிரகாரம் நடராசா அவர்கள் உசன் ஊர் எல்லையில் உள்ள தவசிகுளத்தில் (தற்போது மடம் இருக்கும்) 80 பரப்புத் தென்னங்காணியை வாங்கி 1918 ஆம் ஆண்டு இக்காணியில் மடத்தையும் கட்டிக் கொடுத்தார். இதில் மங்கயற்கரசி அம்மாவும் (சடையம்மா), சிந்தாமணி அம்மாவும் குடிபுகுந்தனர். இம்மடத்தில் இவர்கள் இருவரும் கூட்டுப்பாடல் (பஜனைகள்), நால்வர் குருபூசைகள் என்பவற்றைச் செய்து வந்தனர். இவற்றில் பல அடியார்கள் கலந்து வந்தனர். இம்மடத்திற்கும் உசன் கிராமத்திற்கும் பல தொடர்புகள் இருந்து வந்தமையால், உசன் சமாதி மடம் எனப் பலரும் அழைத்து வந்தனர்.

திருச்சிற்றம்பலம்

# தென்னாடு காத்த திருத்தொண்டர் எம்பிரான்

# குலச்சிறை நாயனார்



சிவத்திருமதி.
நவிசா சுஜிந்தன்
ஆய்வு மாணவர்,
முதுதத்துவமாணி



குலச்சிறை நாயனார்

தமிழ்ச் சமூக வரலாற்றில் அரச பதவியின் உயரத்திலும், பதியின் பணிவை இழக்காமல், சமய நெருக்கடியின் நடுவிலும் தன் நெறியிலிருந்து விலகாமல், சைவத்தின் மறுமலர்ச்சிக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்த பெருந்தகையாளர் குலச்சிறை நாயனார். இவர் பாண்டிய நாட்டின் தலைமை அமைச்சராக விளங்கியதோடு, மதுரையில் சைவம் மீண்டும் தழைத்தோங்குவதற்குப் பெரும் பங்காற்றியவர். இவர் பாண்டிய நாட்டின் வளம் பெருக்கிய சிறப்புமிக்க மணமேல்குடியில் தோன்றிய இவரை சுந்தரமூர்த்தி நாயனார், திருத்தொண்டத் தொகையில், **"பெருநம்பி குலச்சிறை தன் அடியார்க்கும் அடியேன்"** என்று குறிப்பிடுகிறார்.

இளமைப் பருவம் முதலே சிவபெருமானிடத்தில் ஆழ்ந்த பத்தி கொண்டிருந்தார். சிவனை நேசித்த அளவுக்குச் சிவனடியார்களையும் நேசித்தார். சிவனடியாரைக் கண்டவுடன் பணிந்து வணங்கி, அன்போடு வரவேற்று, திருவமுது அளிப்பதைத் தமது வாழ்வின் பெரும் தொண்டாகக் கொண்டார். அமைச்சர் என்ற பதவி அவருக்குப் பெருமையைத் தரவில்லை மாறாக, அந்தப் பதவியை அறத்திற்குப் பயன்படுத்த வேண்டிய பொறுப்பை உணர்த்தியது. அரசன் சமண சமயத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்த காலத்திலும் குலச்சிறையார் தம் சைவநெறியை விட்டு விலகவில்லை. அரசனுக்கு எதிராக வெறுப்புடன் செயல்படாமல், அரசுப் பொறுப்பை நேர்மையுடன் நிறைவேற்றியபடியே சைவநெறியைப் பாதுகாத்தார்.

அவருக்கு துணையாக நின்றவர் பாண்டிய மன்னனின் அரசி மங்கையர்க்கரசியார். கணவன் வேறு சமயத்தைச் சார்ந்திருந்த நிலையிலும், சைவத்தின் மீது கொண்டிருந்த பத்தியைக் கைவிடாத அரசியாருக்கு குலச்சிறையார் உறுதியான துணையாக இருந்தார். அவர்களின் இந்தச் சிவத்தொண்டை,

**"ஆய செய்கையர் ஆயவர் ஆறு அணி**
**நாயனார் திருப் பாதம் நவின்று உளார்**
**பாய சீர் புனை பாண்டி மா தேவியார்**
**மேய தொண்டுக்கு மெய்த் தொண்டர் ஆயினார்."**

**(திருத்தொண்டர் புராணம் (12:28:09)**

இந்த வரிகள் குலச்சிறையார், பாண்டிமாதேவியாரின் சிவத்தொண்டிற்கு உண்மையான துணையாக இருந்து செயல்பட்ட பெருமையை எடுத்துரைக்கின்றன.

குலச்சிறையாரின் அறிவாற்றல், நிர்வாகத் திறன், நேர்மை, மனிதநேயம் ஆகியவற்றைக் கண்டு பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறன் அவரைத் தலைமை அமைச்சராக நியமித்தான். அமைச்சர் பதவி அவருக்கு அதிகாரத்தை வழங்கியது ஆனால் அந்த அதிகாரம் அவரது பணிவை மாற்றவில்லை. அரசவையில் அவர் அமைச்சராக இருந்தார். சிவனடியார்களின் முன்னிலையில் அவர் ஒரு தொண்டராக இருந்தார். இதுவே அவரது ஆளுமையின் தனிச்சிறப்பு. பதவி உயர்ந்தாலும் பணிவு உயர வேண்டும் அதிகாரம் பெருகினாலும் அறம் குறையக்கூடாது என்பதை அவரது வாழ்க்கை நமக்குக் கற்றுத்தருகிறது.

குலச்சிறையார் வாழ்ந்த காலத்தில் பாண்டிய மன்னன் சமண சமயத்தின் மீது ஈடுபாடு கொண்டிருந்தான். அரசனின் செல்வாக்கினால் மக்களிடையிலும் சமண சமயத்தின் ஆதிக்கம் அதிகரித்தது. சைவ சமயத்தினர் பல்வேறு இடையூறுகளை எதிர்கொண்டனர். ஆனால் அந்தச் சூழல் குலச்சிறையாரின் நம்பிக்கையை அசைக்கவில்லை. சூழ்நிலை மாறியதால் அவர் மாறவில்லை மாறாக, தன் நெறியை நிலைநிறுத்தும் பொறுப்பை இன்னும் ஆழமாக உணர்ந்தார். இவருடன் சைவநெறியில் உறுதியாக நின்றவர் பாண்டிய மாதேவியான மங்கையர்க்கரசியார். இருவரின் உள்ளத்திலும் "பாண்டிய நாட்டில் சைவம் மீண்டும் தழைக்க வேண்டும்." என்ற கவலை இருந்தது. இந்த இரு உள்ளங்களின் ஒருமித்த சிந்தனையே பின்னர் மதுரையின் சமய வரலாற்றில் பெரும்

மாற்றத்திற்குக் காரணமாகும்.

அக்காலகட்டத்தில் திருமறைக்காட்டில் திருஞானசம்பந்தர் எழுந்தருளியிருப்பதை குலச்சிறையாரும் மங்கையர்க்கரசியாரும் அறிந்தனர். திருஞானசம்பந்தரை மதுரைக்கு வருமாறு அழைப்பு விடுத்தனர். அழைப்பை ஏற்று ஞானசம்பந்தர் பாண்டிய நாட்டை நோக்கி எழுந்தருளினார். அவரை வரவேற்க குலச்சிறையார் சென்றார். அமைச்சர் என்ற பெருமை அவரைத் தடுத்து நிறுத்தவில்லை. ஞானத்தின் திருவுருவமாகத் திகழ்ந்த சம்பந்தரை கண்டவுடன், அவர் நிலத்தில் வீழ்ந்து வணங்கினார். அந்தக் காட்சி உயர்ந்த பண்பின் முன்னால் பணியத் தெரிந்த பணிவே ஒருவரை உயர்த்தும் என்ற உண்மையை உணர்த்துகிறது திருஞானசம்பந்தரை வரவேற்ற குலச்சிறையார், அந்த வருகை பாண்டிய நாட்டின் எதிர்கால மாற்றத்திற்கான அருட்பேறு என்று உணர்ந்தார். அந்த உணர்வை வெளிப்படுத்தும் சேக்கிழாரின் வரிகள் மிகச் சிறப்புடையவை:

**“சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும் இனி எதிர்காலத்தின் சிறப்பும் இன்று எழுந்தருளப்பெற்ற பேறிதனால் எற்றைக்கும் திருவருடையோம் நன்றியினால் நெறியில் அழுந்திய நாடும் நற்றமிழ்வேந்தனும் உய்ந்து வென்றிகொள் திருநீற்றொளியினில் விளங்கும் மேன்மையும் படைத்தனம்.”**

**- (திருத்தொண்டர் புராணம் (12:34:2057)**

இந்தப் பாடல் வரிகள் குலச்சிறையாரின் உள்ளத்தில் இருந்த நம்பிக்கையின் ஆழத்தை வெளிப்படுத்துகின்றன. கடந்த காலத்தின் சிறப்பு மீண்டும் மலர வேண்டும் எதிர்காலம் நல்வழியில் செல்ல வேண்டும் பாண்டிய நாடும் அதன் மன்னனும் உய்ய வேண்டும் திருநீற்றின் ஒளி மீண்டும் வெற்றியுடன் விளங்க வேண்டும் என்பதே அவரது உள்ளக்கனவு.

ஞானசம்பந்தர் மதுரையில் தங்கியிருப்பதை விரும்பாத சிலர் அவருடைய திருமடத்திற்கு தீ வைத்தனர். இந்தச் செய்தி குலச்சிறையாரின் உள்ளத்தைப் பதறச் செய்தது. தாம் பாதுகாக்க வேண்டிய அடியாருக்கு ஆபத்து ஏற்பட்டுவிட்டதே என்ற கவலை அவரை வாட்டியது. ஆனால் இறையருளால் ஞானசம்பந்தர் பாதுகாப்பாக இருந்தார். அத்தீ பாண்டிய மன்னனுக்கு வெப்பு நோய் ஏற்பட்டது. பல்வேறு முயற்சிகளும் பலனளிக்காத நிலையில், மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் ஞானசம்பந்தரின் அருளால் மன்னனின் நோய் தீரும் என எடுத்துரைத்தனர். அரசனின் வேண்டுகோளை ஏற்று ஞானசம்பந்தரை அரண்மனைக்கு அழைத்து வருவதற்கும் குலச்சிறையாரே முனைந்தார். வெப்பு நோய் தீர்ந்து, அஞ்ஞான இருள் அகன்றது.

திருஞானசம்பந்தப் பெருமான் மதுரை ஆலவாய் அண்ணலைப் போற்றி பதிகம் பாடி பாண்டிய மன்னனின் வெப்பு நோயைத் தீர்த்தார். அதன் பின்னர் சமணர்களுக்கும் ஞானசம்பந்தருக்கும் இடையில் அனல்வாதம், புனல்வாதம் போன்ற வாதங்கள் ஏற்பட்ட போது ஞானசம்பந்தரின் திருப்பதிகங்கள் வெற்றி பெற்றது. புனல்வாதத்தில் வைகையில் விடப்பட்ட திருப்பாசுர ஏடு நீரோட்டத்தை எதிர்த்து திருவேடகத்தில் கரையேறியது. அந்தத் திருவேட்டைத் தேடி எடுத்துச் சென்று மன்னனிடம் சேர்த்த பெருமையும் குலச்சிறையாருக்குரியது. இதன் மூலம் பாண்டிய மன்னனின் உள்ளத்தில் இருந்த சமயக் குழப்பம் நீங்கி, சைவநெறியின் மீது மீண்டும் நம்பிக்கை மலர்ந்தது.

ஞானசம்பந்தப் பெருமானின் வருகையால் சைவம் மீண்டும் எழுச்சி பெற்றது. ஆலவாய் அண்ணலின் திருக்கோயிலில் வழிபாடுகள் சிறந்தன. பாண்டிய நாட்டின் பல திருத்தலங்களுக்கும் ஞானசம்பந்தரை அழைத்துச் சென்று வழிபாடு செய்யச் செய்தார் குலச்சிறையார். அவர் தமது சொந்த ஊரான மணமேல்குடிக்கும் ஞானசம்பந்தரை அழைத்துச் சென்று இறைவனை வழிபடச் செய்தார். இந்தப் பணியைப் பற்றி குறிப்பிடப்படும் வரிகள் குலச்சிறையாரின் வாழ்வின் நோக்கத்தை மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றன:

**“புன்நயத் தருகந்தர் பொய் நீக்கவும்**
**தென்னர் நாடு திருநீறு போற்றவும்**
**மன்னு காழியர் வள்ளலார் பொன் அடி**
**சென்னி சேர்த்தி மகிழ்ந்த சிறப்பினார்.”**

**(திருத்தொண்டர் புராணம் (12:28:10)**

இந்த வரிகளில் தன்பாண்டிய நாட்டில் திருநீற்றின் பெருமை மீண்டும் நிலைபெற வேண்டும் என்பதற்காகக் குலச்சிறையார் மேற்கொண்ட தொண்டு இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

அவரை பல திருத்தலங்களுக்கு அழைத்துச் சென்றார். மதுரை ஆலவாயில் வழிபாடு செய்தார். பின்னர் பாண்டிய நாட்டின் பல சிவத்தலங்களுக்கும் அழைத்துச் சென்றார். இறுதியில் தம் சொந்த ஊரான மணமேல்குடிக்கும் எழுந்தருளச் செய்து அங்குள்ள இறைவனை வழிபடச் செய்தார். இது குலச்சிறையாரின் பத்தியின் இன்னொரு பரிமாணத்தை வெளிப்படுத்துகிறது. ஒரு தலத்தில் மட்டும் சிவநெறி தழைக்க வேண்டும் என்பது மட்டுமல்லாமல், நாடெங்கும் சிவநெறி விளங்க வேண்டும் என்பதே அவரது விருப்பமாக இருந்தது.

இன்றும் பலர் பதவிக்காகக் கொள்கையை மாற்றுகின்றனர். புகழுக்காக உண்மையை மறைக்கின்றனர். சமூக அழுத்தத்தால் தமது பண்பாட்டை மறக்கின்றனர். அதிகாரம் கிடைத்தவுடன் சேவையை மறந்து விடுகின்றனர் இத்தகைய சூழலில் குலச்சிறை நாயனார் வாழ்வியல் உண்மையை எம்மவருக்கு சிறந்த பாடமாகும். இவரது குருபூசை ஆவணி அனுசம்.

திருச்சிற்றம்பலம்

# திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தின் பேருரை ஆசிரியர்
# சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் உரை நயம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)



பவானி சிவ
அ.வேலுச்சாமி

**திருநாட்டுச் சிறப்பு:- பாடல்:-**

**வம்பு லாமலர் நீரால் வழிபட்டுச்**
**செம்பொன் வார்கரை எண்ணில் சிவாலயத்து**
**எம்பிரானை இறைஞ்சலின் ஈர்ம்பொன்னி**
**உம்பர் நாயகர்க்கு அன்பரும் ஒக்குமால்.**

**பொருள்:-** வாசனையுடைய மலர்களாலும் நீரினாலும் வழிபாடு செய்து செம்பொன் மணலையுடைய இருகரையிலும் உள்ள எண்ணில்லாத சிவாலயங்களிலே எம்பெருமானைக் கும்பிடுதலினாலே நீர் வற்றாத காவிரி தேவதேவனாகிய சிவபெருமானின் அடியவர்களையும் போன்றுள்ளது.

காவிரி மலராலும் நீராலும் வழிபட்டுப் பொன் தூவிச் சிவாலயங்களைச் சூழ்ந்து செல்லுதலால் அக்காரியமே செய்யும் அன்பர்களுக்கு ஒப்புமை பெறுவதாம்.



சிவக்கவிமணி
சி.கே சுப்பிரமணிய முதலியார்

ஆசிரியர் பெருமான் காவிரிக்கு உவமை கூறுகின்றபோது பூமகளை வளர்க்கும் செவிலித்தாய் போன்றுள்ளது என்றும், நான்முகனாகிய பிரம்மனையும் போன்றுள்ளது என்றும், சிவபெருமானது திருமுடியிருந்து வருகின்ற கங்கையே போலும் என்றும், இறைவனது ஒரு பாகத்தைத் தம்மதாக ஆக்கிக்கொண்டு உலகத்தை ஆட்கொண்ட உமாதேவியாருடைய திருவுள்ளத்திலே எல்லா உயிர்களிடத்தும் பரந்து நெகிழும் தன்மையதாம் கருணையுடைய இனிய ஒழுக்கம் போன்றதாம் என்றும் பலவாறு உவமைகூறிய ஆசிரியர் பெருமான் பூவும் நீரும் கொண்டு பெருமானை வழிபாடு செய்யும் அடியார் பெருமக்களுக்கு உவமை கூறி நிறைவு செய்து காட்டுகிறார்.

**வி-உரை: அன்பரும்:-** உம்மை - சிறப்பு உம்மை. தனக்கு உவமையில்லாத இறைவனுக்கு அன்பராவார்களும் அவ்வாறே தமக்கு உவமையில்லாதவர்கள் “பெருமையால் தம்மை ஒப்பார்” என்பது தடுத்தாட்கொண்ட புராணத்தில் ஆரூர்ப் பெருமானே நம்பிகளிடத்தில் அருளியது. ஆளுடைய நாயகியின் உண்ணகிழ் கருணையின் ஒழுக்கமே அன்பர்களை வழிப்படுத்திச் சிவபெருமானிடத்தில் சேர்ப்பதாதலின் அதனைப் போன்ற காவிரியும் வழிபட்டுக்காட்டி அவரையும் ஒழுக்கும் என்று, மேற்பாட்டினைச் சார இதனை வைத்தார்.

**வம்புலாம் மலர்:-** அன்றலர்ந்தமையால் மணம் வீசிக்கொண்டிருக்கும் புதுமலர்.

**மலர்நீர்:-** **"புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு"** என்பது திருமந்திரம், **"எய்தியசீர் ஆகமத்தில் இயம்பிய பூசனைக்கேற்ப கொய்த மலரும் புனலும் கொண்டணைந்தார்"** என்பது கண்ணப்பநாயனார் திருச்சரிதத்தில் ஆசிரியர் பெருமான் திருவாக்கு.

**நீரால் வழிபட்டு இறைஞ்சலின்:-** நீரால் அருக்கியம், ஆசமனம், பாத்தியம் கொடுத்தலும் அபிடேகித்தலும் ஆம். **இறைஞ்சுதல்:-** அடி வீழ்ந்து வணக்குதல். **வழிபடுதல் :-** இறைவன் காட்டிய வழியிலே, அல்லது அவனைக் கூடும் வழியிலே படுதல் என்க. காவிரி தனது இருகரையும் உள்ள அனேக சிவாலயங்களிலும் பூவுடன் சேர்ந்த நீரை எங்கும் நிரம்ப வீசிப் பொன்னையும் தூவி ஆலயங்களைச் சூழ்ந்து செல்வதாகும். ஆதலின் இதனை அன்பர்களைப் போல காண்கின்றார் ஆசிரியர். காவிரியின் வடகரையிலும் தென்கரையிலும் பாடல் பெற்ற தலங்கள் பெரும்பாலும் இருப்பது குறிப்பாம்.

தனது முன்னை நிலையாகிய கங்கையாய் இருந்தபோது பெறாது, அகத்திய மாமுனிவரது கமண்டலத்தில் தங்கியதனாலே தான் பெற்ற பயனாகிய சிவபுண்ணியத்தின் தொடர்பினாலே பின்னரும் சிவபூசை செய்து பெரும் பேறுபெற்றது என்ற குறிப்பும் காண லாம்.

**செம்பொன் வாக்கரை:-** மண்மடந்தை பொன் மலரில் தாழ்வதால் இருமருங்கும் செம்பொன் வார்கரையாயிற்று. பொன்னுடையமையாலே இதற்குப் பொன்னி என்று பெயராயிற்று.

**ஈர்ப்பொன்னி:-** நீர் மேலும் உள்ளும் குறைவதனால் ஈரம் மாறாத என்றபடி

**ஈரம்:-** அன்பு என்றலும் குறிப்பு.

**பாடல் 17:-**

**காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லொம் குழைக்கரும்பு**
**மாடெல்லாங் கருங்குவளை வயலெள்ளாம் நெருங்குவளை**
**கோடெல்லாம் மடவன்னங் குளமெல்லாங் கடலன்ன**
**நாடெல்லாம் நீர்நாடு தனையொவ்வா நலமெல்லாம்.**

**பொருள்:-** கழையாகிழய கரும்பு எல்லாக் காடுகளிலும் உள்ளன. சோலைகளில் எங்கும் சிறுகிளை சிறுதளிர் தோறும் மலர் அரும்புகள் தோன்றும். பக்கங்களில் எங்கும் கரிய குவளை மலர்கள் அலரும். வயல்களில் எங்கும் நெருங்கிய சங்குகள் கிடக்கும். கரை எங்கும் இளமையுடைய அன்னங்கள் உண்டு. குளங்கள் எல்லாம் கடல்போன்ற பரப்பை உடையன. எந்தநாடும் எந்த நலத்தாலும் சோழநாட்டிற்கு ஒப்பாகாது.

காவிரி பாய்ந்து வளம் செய்யக்கூடிய சோழநாட்டின் சிறப்பை ஆசிரியர் பெருமான் விளக்கியும் சோழநாட்டிற்கு ஒப்பாக எந்தநாட்டையும் கூறமுடியாது என்றும் விளக்கியுள்ளார்கள்.

**வி-உரை:-** காடு எல்லாம் கழை கரும்பு:- காடுகளில் எங்கும் கரும்பு விளைந்துள்ளன. கரும்பு மனிதர் விளைவிக்க விளையினும் வளத்தின் மிகுதியால் காட்டுப்பயிர் போன்றன என்றலும் ஆம் "செந்தாமரைக் காடயை மேனி" என்றது திருவாசகம்.

**வயலெல்லாம் நெருங்குவளை:-** வளை – சங்குகள்

**கடல் அன்னை:-** நீர் நிறைந்த பரப்பினாலும் உதவியினாலும் குளங்கள் கடல்போன்றன. கடல் மழையை உதவிப் பயிர் வளர்க்கின்றதுபோல குளங்களும் பயிர் வளர்க்கின்றன.

**"பாரவன்காண் பாரதனில் பயிரானான்காண் பயிர்வளர்க்கும் துளியவன்காண் துளியில்நின்ற நீரவன்காண்"**

**- (சிவபுரம் திருத்தாண்டகம்)**

**நீர்நாடு:-** சோழநாடு காவிரி நீர் பொய்க்காது பெருகிப் பாய்தலால் நாட்டின் அணியை ஏற்றவாறு இப்பாட்டிலே சொல்லணியாலும் நாட்டியவாறு காணலாம்.

**திருச்சிற்றம்பலம்**

**ஆக்கம்: பவானி சிவ அ. வேலுச்சாமி**
**நன்றிகள் - சமயத்தமிழ் திங்கள் இதழ்**

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்

**கல்விக்குச் சரசுவதி, செல்வத்திற்கு இலக்குமி என்றெல்லாம் கொண்டாடும் மரபு எவ்வளவு சரியானது?**

வித்துவான் வி.சா.குருசாமி தேசிகர் எழுதிய பொழிப்புரையுடன் திருஞானசம்பந்தப்பெருமான் அருளிச்செய்த திருமுறைப் பாடல்களை, இக்கேள்விக்குரிய பதிலைச் சிந்திக்கும்போது நாம் அறிந்துகொள்ளுதல் நன்றாகும்.

**அலர்மகண் மலிதர வவனியி னிகழ்பவர்**
**மலர்மலி குழலுமை தனையிட மகிழ்பவர்**
**நலமலி யுருவுடை யவர்நகர் மிகுபுகழ்**
**நிலமலி மிழலையை நினையவ லவரே.**
**-திருஞானசம்பந்தப்பெருமான்**

**பொழிப்புரை:-** மலர் நிறைந்த கூந்தலை உடைய உமையம்மையை இடப்பாகமாகக் கொண்டு மகிழ்பவரும், அழகிய திருமேனியை உடையவரும் ஆகிய சிவபிரானது நிலவுலகத்தே நிறைந்த புகழை உடைய மிழலை நகரை நினையவல்லவர் திருமகளின் கருணையால் செல்வம் நிறையப் பெற்று உலகில் வாழ்வர்.

**கலைமக டலைமக னிவனென வருபவர்**
**அலைமலி தருபுன லரவொடு நகுதலை**
**இலைமலி யிதழியு மிசைதரு சடையினர்**
**நிலைமலி மிழலையை நினையவ லவரே.**
**- திருஞானசம்பந்தப்பெருமான்**

**பொழிப்புரை:-** அலைகள் நிறைந்த கங்கை நதி, பாம்பு, தலை யோடு, வில்வஇலை, மிக்க கொன்றை ஆகியன பொருந்திய சடைமுடியினனாகிய சிவபிரான் உறையும் நிலைபேறு உடைய திருவீழிமிழலையை நினைய வல்லவர் கலைமகளின் தலைவன் இவன் என்னும் ஒவ்வொருவரும் சொல்லத்தக்க தகுதியை உடையவராய்க் கல்வி நலம் வாய்க்கப் பெறுவர்.

அதாவது, எவரெல்லாம் சிவபெருமானை வழிபடுகின்றனரோ அவரனைவருக்கும் இலக்குமிதேவியாரும் சரசுவதிதேவியாரும் சேவைசெய்வர் என்பதாம். எனவே, சிவவழிபாட்டால் கல்வியும் செல்வமும் வீரமும் பெருகும். சிவவழிபாட்டால் மட்டுமே நம் வினைகள் ஒழிந்து உயரமுடியும். எமது வினைப்படி மந்தபுத்தியோடு விளங்கவேண்டும் என்னும் விதியிருந்தால், நாளும் கோளும் மந்தபுத்தியைக் கொடுக்கும்படியே நம்மைச் சூழ்ந்து நிற்கும். நளமகாராசன் ஏழரைச்சனியால் வருந்தியபோது, திருநள்ளாறு திருத்தலஞ் சென்று சிவபெருமானை வழிபட்டான், ஏழரைச்சனியிலிருந்து விடுபட்டான். ஆனால், நாம் திருநள்ளாறு சென்று சனைச்சரனை வழிபட்டு ஏழரைச்சனியிலிருந்து விடுபடலாம் என்று உழன்றுகொண்டு நிற்கின்றோம். எனவே, உண்மையில் நாம் வழிபடவேண்டியது சிவபெருமானையேயாகும். மந்தபுத்தி நீக்கவேண்டும் என்றும் கல்வியில் உயரவேண்டும் என்றும் நாம் சிவபெருமானை வழிபட்டால், மந்தபுத்திக்குரிய வினையை ஒழித்து, கல்விச்செல்வத்தைச் சிவபெருமான் அருளிச்செய்வார் என்பதுதான் திருமுறை முடிவு.



**சிவஞானச் செல்வர். மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர்**

**“பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப் போகமும் திருவும் புணர்ப்பானை”** என்று இவ்வுண்மையைச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அருளிச்செய்கின்றார். சிவவழிபாடில்லாத இடத்தில், சிவவழிபாட்டை பரம்பொருள் வழிபாடாகக் கொள்ளாதவிடத்தில் சரசுவதிதேவியாரும் இலக்குமிதேவியாரும் ஒருபோதும் எழுந்தருளமாட்டார்களாம்! அங்கெல்லாம் வினைகளே எழுந்தருளி நிற்கும்! எனவே, சிவவழிபாட்டை முன்னிறுத்தியே எவ்வழிபாடும் கொள்ளமுடியும். சிவவழிபாட்டைப் புறந்தள்ளி எவ்வழிபாடு செய்தாலும், அதனால் பயன் விளையாது! எனவே, பாடசாலைகளில் விளங்கவேண்டிய திருத்தலம் சிவாலயமேயாகும். சைவக்கோமான் பொன். இராமநாதன் பெருந்தகை தாம் எழுப்பிய பரமேஸ்வராக் கல்லூரியிலும் இராமநாதன் கல்லூரியிலும் சிவாலயமே கட்டுவித்தார். இதனாலேயே, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் சிவாலயம் விளங்குவதாயிற்று. ஆனால், அதன்பிறகு தமிழர் நிலங்களில் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் முதலிய கல்விக்கூடங்களில் சிவாலயம் எழுப்பப்படல் குறைக்கப்பட்டே வருகின்றது.

இஃது நம்மவர் தவக்குறைவேயாகும். இந்துமதம் என்னும்பெயரில் ஏகான்மவாத சுமார்த்தமதம் நம்மவரின் சிந்தைக்குள் புகுந்தமையினாலேயே இவ் இடர்களாம். எனவே, தமிழர் வியாபாரத் தலங்களிலும் தமிழர் கல்விக்கூடங்களிலும் சிவவழிபாட்டை சிறப்புச்செய்வோம்! தமிழர் குடி உயர்ந்து பூமிப்பந்தில் சிறந்துவிளங்கத் திருப்பணி செய்வோம்.

**திருச்சிற்றம்பலம்**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org




# More Than Prayer: What Temple Festivals Actually Do

Ask most people what a temple festival is for, and you will get the obvious answer. It is worship. The deity comes out, the crowd folds its hands, the chariot moves. That answer is true, and it is also incomplete. A festival is one of the few institutions our community has that does several jobs at once, and only one of those jobs is religious.

Take the Nallur Kandaswamy festival, which runs this year from 16 August to 12 September. Twenty- seven days. Flag hoisting on the first morning, then a slow build through Mancham, Sapparam and Kailasavaganam, until the chariot rolls on 9 September and the Theertham follows the next day. Anyone who has been to Jaffna in that stretch knows the town changes shape. Streets are given over to stalls. Houses fill with relatives who have not visited in years. Flights into Colombo are booked out by people flying in from Toronto, London, Melbourne and Sydney.

That last detail is the point. For a community scattered by war and migration, the festival calendar is the only reliable reason to be in the same place at the same time. Weddings gather a family. A festival gathers a district. Cousins who grew up on different continents meet properly for the first time because both sets of parents decided this was the year to go for Ther. No cultural organisation, no diaspora association, no WhatsApp group has ever managed that on its own.

And this is not really about Nallur. Nallur is just the largest example. The same thing happens at the Murugan temple here in Sydney every year, and at every kovil in Toronto, London and Kuala Lumpur that runs its own thiruvizha. The scale changes What happens does not. For those weeks, the entire community is in one place, which is something that almost never occurs otherwise

And look at what people actually do when they get there. The people get to celebrate and watch students who have been training all year to dance. Singers sing Thevarams and other religious hymns, with everyone singing after them. There is nadaswaram and thavil at the front, melam somewhere else, and a group of boys learning to keep time on the mridhngam. Devotees carry kavadi and dance it through the crowd. Volunteers cook, serve, direct traffic, hold ropes, mind children who are not theirs.

That is the part worth noticing. A festival is one of the only occasions where the community produces something together rather than consuming something together. Everybody has a job, from the poosari to the fourteen-year-old handing out sundal. The art forms survive because they are performed, not because anyone decided to preserve them. A kid who watches kavadi aattam every year for a decade eventually wants to carry one, and that is how it passes down.

Although prayers and practising religion are the most important part of a temple Thiruvizha. It should be noted its not the only aspect of Thiruvizha. You can go for the crowd, the food, the sound, your grandmother's company, and still be participating fully in what the thiruvizha is for.

# Saiva Saint Kulachirai Nayanar - Minister of Madurai





Srisankarshan Srisatkunarajah
English Editor
Thennadu

Kulachirai Nayanar is counted the twenty-first of the sixty-three Nayanmars, was the chief minister of the Pandya king Nedumaran, known as Koon Pandiyan. He composed no hymns and holds no place among the Thevaram poets; he belongs to the servitor-saints, whose standing rests on acts of devotion rather than on song. Because he left no work of his own, he is known entirely through others: he is named in Sundarar's Tiruthondar Thokai, the earliest list of the Nayanmars, and praised by Sambandar in the hymns sung at Madurai, while his life is narrated at length only in Sekkizhar's twelfth-century Periya Puranam. That lengthy account presents his devotion as service carried out from office: the maintenance of Sivaperuman's devotees, and the return of a Jain court to Saivism.

## His background

Kulachirayar was born at Manamerkudi, an agrarian town in the Pandya country, and rose to the office of chief minister. The poetic sources agree on the form his devotion took, of him having honoured the devotees without regard to caste, receiving them and providing them with food, Thiruneeru and rudraksam beads. Though this is absent from the canonical account, one later retelling credits his administration with a part in the Pandya

military successes at Uzhinjnam, Paazhil and Nelveli.

### A Saivite in jain court

During king Nedumaran's reign the Pandya court had gone over to Jainism, then the dominant faith in the region. The famous Pandya queen, Mangayarkkarasiyar, who is also a Chola princess and herself one of the sixty-three saints, remained Saivite, as did Kulachiraiyar. They were the principal adherents of the older faith within a court otherwise given to Jainism, and the later saints' hymns present the position of Saivism there as being insecure.

### Him in Sambandar's life

When the child-saint Tirujnanasambandhar was in the Chola country, Kulachirayar and the queen together invited him to Madurai. The occasion was the king's illness: a persistent fever, and the curvature of the spine from which he took the name Koon Pandiyan. Sambandar's hymn is credited with curing both. The king returned to Saivam, was thereafter honoured as Ninra Seer Nedumaran, and his back now straight, was named Sundara Pandya; he is himself counted among the sixty-three! Sambandar even named Kulachirayar and the queen in the hymns he sang on entering the Pandya country.

### Controversial involvement

Sekkizhar's account states that after the Jains were defeated in dispute, the losing party was impaled on the stake, a number the Madurai tradition puts at eight thousand, and it is alleged that Kulachirayar was in charge of the order. The events, if historical, belong to the seventh century. Given that Kulachirayar left no account of his own, the earliest text to name him is Sundarar's Thiru Thondar Thokai, which introduces his saintly name without narrative. Association with this particular context, enters only with Nambiyandar Nambi's Tiruttondar Tiruvanthathi, compiled around the turn of the eleventh century, and is elaborated by Sekkizhar in the twelfth, three to five hundred years after the events it describes. Scholars of the Tevaram have noted that there is no firm basis for the persecution, and that while impaling was a judicial punishment of the period, its use as religious reprisal is doubtful to the extent of aggrandisation we regard it with. On this evidence the attribution presents itself as a later addition to the hagiography rather than as a record of what Kulachirayar's ethical and moral compass looked like.

### How he is remembered

We now remember him with the name that Sundarar gives him: Perunambi, a title of honour, Nambi denoting a man of the first rank. Since Sundarar's list is the earliest source, it is this designation that secures his place in the Saintly canon. The temple at Manamerkudi, his birthplace, keeps images of Sambandar, the saint, the queen and the king together, marking the place where the four are held to have last worshipped as one. A very race occurance to have 4 saints at one place for one miracle. His Guru remembrance falls in the Tamil month of Aavani, on the Anusham natchahtiram, observed as the day he reached the feet of the lord.

# யாழ் பல்கலைக்கழக முதலாவது சைவசித்தாந்த ஆய்வு மாநாட்டில் பேராசிரியர் நல்லூர் ச.சரவணன் அவர்களின் ஆதார சுருதி உரை



பேராசிரியர் நல்லூர் ச.சரவணன்
தலைவர் - சைவசித்தாந்த துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

**(கடந்த திங்கள் தொடர்ச்சி)**

ஏன் அதை நான் இங்கே குறிப்பிடுகின்றேன் என்றால் இந்தத் திருமறைக்காடு அல்லது வேதாரண்யம் என்பதுதான் கதவைக் காட்டுகிற இடம். குதவைத் திறக்க மூட வைத்துக் காட்டுகிற இடம் என்று சொன்னால் அதற்கு முன்னதாக வேதம் அதைச் செய்யவில்லை என்பது அதனுடைய பொருள். அப்படியானால் வைதீக மரபு என்பது கடவுளைக் காட்டாமல் இருந்ததை காட்டுகிற ஒரு அடிப்படையைத் திருமுறை மரபு செய்கிறது.

அதைத்தான் நாம் காரைக்கால் அம்மையார் சொன்னதை வைத்துக்கொண்டு திருஞானசம்பந்தர் மிகத் தெளிவாக 'தானாய் வேறாய் உடனானான்' என்று ஒரு முடிவை வழங்குகிறார். இந்த முடிவைத்தான் பிற்காலத்தில் திருஞானசம்பந்தருக்குப் பின்னர் வந்த சங்கராச்சாரியார் திராவிட சித்தாந்தம் வேறு வைதீக சித்தாந்தம் வேறு என்பதைச் சொல்லி திராவிட சித்தாந்தம் பேசியவர் திருஞானசம்பந்தர் என்று பேசினார். அதனால் அவர் திராவிட சிசு என்று திருஞானசம்பந்தரைச் சொல்கிறார். திராவிட சித்தாந்தம் என்பது சைவ சித்தாந்தத்தினுடைய இன்னொரு பெயராக இருக்கிறது. அதாவது சைவ சித்தாந்தம் என்பது வைதீகத்தினுடைய பிறப்புரிமைக்கு வேறானது என்பது மாறாமறை என்பது பிறப்புரிமை சார்ந்தது என்பதை மறைமுகமாகத் திருஞானசம்பந்தரும் சுட்டிக்காட்டுகிறார்.



தொகுப்பாளர்
செல்வி. சதீஸ்வரன் டிலக்ஷனா
நான்காம் வருட மாணவி
யாழ் பல்கலைக்கழகம்

அதை நீங்கள் மேலே படித்தால் உங்களுக்குப் புரியும். திருவீழிமிழலைப் பதிகத்தில் **"ஈராய் முதல் ஒன்றாய் இருபெண் ஆண் குணம் மூன்றாய்"** என்று சொல்லி பிறகு அடுத்த அடியில் **"மாறாமறை நான்காய் வரும்பூதம் அவை ஐந்தாய்"** என்று சொல்லுகிறார். அதற்கு **"ஆறார் சுவை ஏழோசையோடு எட்டுத்திசை என்று சொல்லி "தானாய் வேறாய் உடனானான் இடம் வீழிமிழலையே"** என்று பேசுகிறார். இந்த மாறாமறை என்று சொல்லுவது வைதீகத்தினுடைய இன்றைக்கு நாம் சனாதனம் என்ற பெயரால் வைதீகம் இருக்கின்றது என்று பொதுவாகச் சொன்னாலும் அந்தச் சனாதனம் என்பதனால் அது எந்த வகையில் மாறாததாக இருக்கிறது என்பதைச் சொல்லுவது என்பது திருஞானசம்பந்தர் சைவ சித்தாந்தத்தின் சார்பாக அதைச் சுட்டிக் காட்டுகிறார்.

அது என்னவென்று கேட்டால் மாறாமறை என்று சொன்னால வைதீகம் என்பது பிறப்புரிமையில் மாறவில்லை என்பது அதனுடைய பொருளாகத் திருஞானசம்பந்தர் மூலமாகத் தெரிய வருகிறது என்பதை உங்கள் மூலமாகச் சிந்திக்கிற ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்தது என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த மாறாமறை என்பதிலே இருந்து வேறுபட்டதுதான் கதவைத் திறந்து கடவுளைக் காட்டுவது என்பது. வேதாரண்யம் என்கின்ற திருமறைக்காட்டு அனுபவம் என்பதை நீங்கள் புரிந்துகொண்டால் அது இலங்கைக்கு உரிமை உடையதாக இருக்கிறது என்பதை நீங்கள் புரிந்துகொண்டால் திருக்கேதீச்சரத்தையும் கோணமலையாரையும் பாடிய திருஞானசம்பந்தருடைய நோக்கம் உங்களுக்கு உரியதாகட்டும் என்று நான் உங்களைத் திருஞானசம்பந்தர் மூலமாக வாழ்த்துகின்றேன்.

அடுத்ததாக உங்களுக்கு இறுதியாக ஒரு செய்தியை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நாம் இந்த உலகத்தில் சமய நல்லிணக்கம் பேசுகிற ஒரு காலத்தில் இருக்கிறோம். சமய நல்லிணக்கம் என்பது நாம் நம்முடைய செயல்பாட்டில் காரைக்கால் அம்மையாரை வைத்துக்கொண்டே சமய நல்லிணக்கம் பேசுவதற்கான வாய்ப்பு நிறைய இருக்கிறது. நான் சொன்னது போல நூலறிவு பேசி நுழைவிலாதார் திரிகை என்கிற பாடலே அதை வலியுறுத்துகிறது. ஆனால் கூடுதலாக நம்முடைய தத்துவம் அல்லது அரசியலுக்கான அடிப்படையைக் கொண்டிருக்கின்ற தத்துவம் என்பதாக சொல்லப்பட்ட அரசியலுக்கான மூலபாடத்தோடு கூட

இயங்குகிற ஒரு கட்டமைப்புக்குரிய சைவ சித்தாந்தத்தில் நாம் தொடக்கத்திலேயே ஒன்றைச் சொல்லுகின்றோம். அதுதான் எங்களுடைய கொள்கை என்றும் நாம் பேசுகின்றோம்.

அந்தக் கொள்கை மிக முக்கியமானது. அதுவே நாம் எல்லோரும் சிந்திக்க வேண்டிய கொள்கை. இது சிவஞானபோதத்தினுடைய அவையடக்கம் என்கின்ற தலைப்பிலே இருக்கிற மெய்கண்டாருடைய பாடல்:

**“தம்மை உணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை உடைமை எமை இகழார் தம்மை உணரார்
உணரார் உடங்கியைந்து....”**

என்கின்ற பாடல். இதிலே ஒரு மிக முக்கியமான ஒரு நல்லிணக்கத்தைப் புரிந்துகொள்வது என்பது மிக முக்கியமானது. இந்த நல்லிணக்கத்தைப் புரிந்து கொள்வதனுடைய அடிப்படை என்னவென்றால் உலகத்தை நாம் பன்மையாகப் புரிந்துகொள்ளுதல் என்பதுதான் மிக முக்கியமானது. உலகத்தை நாம் ஒற்றையாகப் புரிந்துகொள்வது என்பது தேவையற்றது. பன்மையாகப் புரிந்துகொள்வது என்பதில் ஒரு ஒருமைப்பாடு வரவேண்டும். பன்மையாகப் புரிந்துகொள்கிற ஒருமைப்பாட்டைத்தான் தம்மை உணர்தல் என்கின்ற ஒன்று. தம்மை உணர்ந்து தாம் உறவு பேண வேண்டும். தம்மை உணர்ந்து உறவு பேணுவதுதான் கேளாம் புறம் என்பது.

நாம் எந்தக் காலத்திலேயும் இந்தத் தன்னை உணர்தல் என்பதைச் சைவ சித்தாந்தம் பேசாது. தன்னை உணர்தல் என்பது கடவுளை உணர்தல். தன்னை உணர்தல் என்பதாகக் கடவுளை உணர்கிற காலத்தில் நாம் எல்லோரும் தம்மை அல்லது தாம் என்பதாக இருக்கின்றோம் என்பதுதான் அதனுடைய உண்மை. திருமூலர் என்ன சொல்கிறார்? “ஒன்று அவன்தானே” என்று சொல்கிறார். ஒன்றாக இருப்பது கடவுள் மட்டும்தான். ஆனால் அதை நாம் இந்தகாலத்திலேயும் அனுபவத்திற்கோ உலகத்திற்கோ சொல்வதில்லை. இரண்டு அவன் இன்னருள். அந்த அருள்தான் நம்மை வாழ வைப்பது. அதுதான் காரைக்கால் அம்மையார் சொன்னது. அருளே நம்மை வாழ வைப்பது. அருள் என்ற ஒன்று வரைதான் நாம் பேச வேண்டும். நம்மை வாழ வைப்பது என்பது அந்த ஒன்று அவன் தானாக இருக்கிற ஒன்றைப் பற்றியது அல்ல.

பலவாக இருக்கிற நம்மை வாழ வைப்பதுதான் அருள். அப்படியான அடிப்படையில்தான் அருள் என்பதைப் பேசுகிறார். காரைக்கால் அம்மையார் தொடங்கிப் பேசுகின்ற இந்தச் சைவ சித்தாந்தம் இது நம்மால் உணரப்படுகின்ற காலத்தில் நாம் ‘தம்மை உணர்தல்’ என்பதாகத்தான் உணர்கிறோம். அப்படி உணர்ந்தால்தான் தமையுடையதன என்பதாக கடவுள் நம்மோடு.இருக்கிறார் என்பதனுடைய பொருளாகும். இல்லையென்றால் தன்னை உணர்தல் என்பது பொய்யானதாக இருக்கிறது என்பதைச் சைவ சித்தாந்தம் பேசுகின்றது. சமய நல்லிணக்கத்திற்கு நம்முடைய உறவு எந்த வகையில் தூரத்து உறவாக இருக்கிறது அண்மை உறவாக இருக்கிறது என்பதைப் பேசுவதுதானே தவிர எதிரிடையாகவோ முரணாகவோ இருக்கிறது என்பதைப் பேசுவது அல்ல. எனவே சமய நல்லிணக்கத்திற்கான ஒரு அடிப்படையைக் கொண்டிருக்கிற ஒரு கொள்கையாக இந்த உலகத்தில் சைவம் இருக்கிறது.

இந்த உலகத்தில் சைவம் இருக்கிறது என்று ஏன் நான் இங்கே குறிப்பிடுகின்றேன் என்றால் மார்க்சிய சித்தாந்தம் உலகத்திற்கான பொதுவுடைமைச் சித்தாந்தம். அந்தப் பொதுவுடைமைச் சித்தாந்தத்தைப் பற்றிய ஒரு உலகம் தழுவிய அறிஞர்களுடைய மிகப்பெரிய பாராட்டு அதற்கு இருக்கிறது. அந்தச் சிறப்பைப் பேசிய பாகே என்கின்ற ஒரு தத்துவப் பேராசிரியர் ‘சைவ சித்தாந்தம்’ என்கின்ற மராட்டிய நூலுக்கு முன்னுரை எழுதும்போது அதைக் குறிப்பிடுகிறார். உலகம் முழுக்கப் பொதுவுடைமைத் தத்துவம் சிறந்ததாக இருந்தாலும் செயல்பாட்டில் நாம் இயங்குவதற்குச் சிறந்ததாக இருப்பது சைவத் தத்துவம் என்று எழுதியிருக்கிறார் பாகே என்கிற அந்த அறிஞர்.

எனவேதான் இந்தச் சைவ நல்லிணக்க அடிப்படையிலே யும் உலக உண்மை அடிப்படையிலேயும் உறவை முன்னெடுக்கிற வகையிலேயும் கொள்கை விளக்கங்கள் இருப்பதனாலே சைவ சித்தாந்தத்தை ஒரு உலகச் சூழமைவுக்குப் பங்களிக்கிற ஒரே தத்துவமாக நாம் காட்டுகின்றோம். மற்ற தத்துவங்களை உறவு என்கின்ற வகையில் தூரத்துச் சித்தாந்தங்களாக நாம் சிந்திக்கின்றோம் என்பதாகச் சொல்லுகின்றேன். இறுதியாக இந்த மக்களுக்கு நாம் சிலவற்றைச் செய்ய வேண்டும். என்னவென்றால் செயற்பாட்டின் இயல்பாக்கம் என்பதாகத் தானாகவே செய்கிற ஒரு செயற்பாட்டில் மக்களை ஈடுபடுத்துவதற்குச் சைவம் சார்ந்த சிந்தனைகளை நாம் பழக்கப்படுத்த வேண்டும்.

அதற்காகத்தான் பன்னிரு திருமுறைகளைப் பயன்படுத்துகின்றோம். இறுதியாக வந்த பாம்பன் சுவாமிகள் கூடத் தகராலய ரகசியம் எழுதும்போது ‘தள்ளர்பாலது சாதிவிகற்பம்’ என்பதாகச் சொல்லி தகராலய ரகசியம் என்கின்ற நூலைக் கேட்கிற தையலர் நீசர் எல்லோரும் இதனால் விடுதலை பெறுவார்கள் என்பதாக ஒரு முடிவுரையையும் அதிலே வழங்குகிறார். அப்படியானால் இந்த எல்லா மனிதர்களுக்குமான ஒரு இணைப்பைப் பேசுவதிலே அதிலே உண்மைத் தன்மையைக் கொண்டிருக்கிற ஒரு சைவ சமயத்தை இயல்பூக்கமாக அனைவரும் தங்களுடைய வாழ்க்கையில் மேற்கொள்வதற்கான பயிற்சிகளை நாம் தர வேண்டும் என்று சொல்லி அந்த நடவடிக்கைகளைச் சமயம் சார்ந்த அறிஞர்கள் மேற்கொள்ள வேண்டும். அதிலே இலங்கை அந்தப் பங்களிப்பைச் செய்கின்றது. இருந்தாலும் அது வரணாசிரமக் கொள்கையைக் கடந்து சிலவற்றை இன்னும் சைவத்தினுடைய அந்த உலகச் சூழமைவை எதிர்கொள்கின்ற வகையிலேயும் மக்கள் இனத்தை உறவு கொள்ள வைக்கின்ற வகையிலேயும் புரிந்துகொண்டு அதை நாம் செயல்படுத்த வேண்டிய கட்டாயம் இருக்கிறது என்பதை இந்த ஆய்வு மாநாட்டினுடைய செய்தியாக உங்களுக்கு நான் அமைத்து நன்றி கூறிக்கொள்கின்றேன். (06)

**(முற்றும்)**

**திருச்சிற்றம்பலம்**

# My Kevala State

**Last Month Summary:**

Through their discussion, Sivakan and his friends concluded that the soul is an eternal, conscious reality, distinct from the body, senses, mind, and breath. They then explored the three states through which the soul progresses. In the kevala state, the soul exists without a body and its intelligence is completely veiled by aanava mala. In the sakala state, the Lord provides the soul with a body and material world according to its karma, allowing its intelligence to become partially expressed while it experiences pleasure and suffering. Once its karmic effects are exhausted and the three impurities are removed, the soul enters the suddha state, where its intelligence is fully revealed and it no longer undergoes rebirth.

Of the three states in which the soul exists, we will now look at the characteristics of the kevala state. In this state, the soul exists without a body and is completely covered by aanava malam, the primordial impurity.

To understand this more clearly, consider the example of cataracts. We use our eyes to see the world around us, but when a cataract develops, it can gradually block our vision. As the cataract becomes worse, even nearby objects may become difficult to see. Before the cataract developed, however, our vision was clear and we could see even small objects.

In a similar way, during the kevala state, the soul is affected by aanavam, which covers its intelligence and prevents it from functioning properly. When the soul is completely surrounded by aanava malam, its intelligence becomes so restricted that the soul is described as being reduced to the size of an atom (anu). This is why the impurity is called aanavam.

The Lord gives the soul a body so that it can gradually free itself from the influence of aanavam. However, aanavam continues to affect the soul even in the sakala state, when it has a body. As a result, the soul's ability to understand and experience things remains limited.

The subtle nature of aanavam can be understood through a story from the life of the great spiritual teacher Meikandaar.

At Thiruvennai Nallur, there lived a boy named Meikandaar, whose name means one who has understood the ultimate Reality. Remarkably, he was only two years old. Despite his young age, many people travelled from different places to see him, pay their respects and receive his blessings.

Among them was the teacher of Meikandaar's father. He was an elderly and highly knowledgeable man who had studied the Agamas and other scriptures extensively. However, when he saw the young Meikandaar, he doubted that such a young child could truly be a realised master. His extensive knowledge had led him to become proud, and he decided to test the child's understanding.

He asked Meikandaar, "What is aanavam?"

Without hesitation, the young Meikandaar replied that aanavam was standing right in front of him, referring to the man himself.

The answer immediately humbled the elderly teacher. He recognised the pride that had prevented him from seeing the truth clearly. His arrogance disappeared, and he respectfully bowed before Meikandaar and accepted him as his teacher.

Although the elderly man had great knowledge of the scriptures, his understanding had been clouded by aanavam. The story shows how aanavam can remain hidden within a



person, even when they possess a great deal of knowledge.

When the soul exists without a body, aanavam completely obstructs the expression of its intelligence. When the soul takes on a body, it is considered to be born. It then lives through that body until the body eventually dies. Before taking on another body, the soul again exists without a body, covered by aanavam and surrounded by ignorance. This is known as the kevala state.

During this state, the soul's past actions (vinai or karma) continue to mature. When the Lord determines that these actions are ready to produce their results, He provides the soul with an appropriate body and circumstances through which those karmic results can be experienced. The soul then enters the sakala state once again.

In the sakala state, the soul has a body and is able to express its intelligence, although this expression may be limited or, at times, more fully developed. In this sense, the kevala and sakala states are closely connected, as the soul continues its journey towards becoming free from the limitations of aanavam.

Saiva Philosophy Reference: The takeaway of this story is that in the kevala state, the soul exists without a body and its intelligence is completely obscured by aanava mala, the primordial impurity. Like cataracts which block the eyes, aanavam prevents the soul from fully expressing its knowledge and can lead to pride and ignorance. Sivan, through his grace, provides the soul with an appropriate body and experiences based on its matured vinai, allowing it to progress from the kevala state towards spiritual liberation.

# தென்னாட்டு நிகழ்வுகள்



ஆடி மறைமதி வழிபாடுகள் (12-08-2026)



“முதற்சங்க வீதி” தொடக்கப் பூசை வழிபாடுகள் (29-07-2026)



இலங்கை சைவநெறிக்கழக தென்னிந்திய யாத்திரிகள் வழிபாடு (22-08-2026)




வவுனியா வேப்பங்குளம் அன்பக மாணவர்களுக்கு அமுது செய்வித்தல் (25-08-2026)

# தென்னாட்டு நிகழ்வுகள்



ஆடித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (29-07-2026)

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் எழுபத்து மூன்றாவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு", சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் "மதி நிறங்கள்" (மதி கலர்ஸ்) பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2300 மடங்கல் நல்லோரை ஆவணித் திங்கள் 10 ஆம் நாள் நிறைமதி அன்று (27-08-2026 வியாழக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் – HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org

fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org